# தேவன் உங்களை ஒருபோதும் மறப்பதில்லை

## GOD WILL NEVER FORGET YOU

மார்ச் 13, 2015

போதகர் A. சாமுவேல்

**Pastor A. Samuel**

# தேவன் உங்களை ஒருபோதும் மறப்பதில்லை

கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமம் மகிமைப்படுவதாக. இந்த இரவு வேளையில் நமக்கு பிரயோஜனமாக தெரிந்துக்கொள்ளப்படுகிறதான வசனம் ரோமருக்கு எழுதிய நிருபம் 8ம் அதிகாரம் 28ம் வசனம்:

**“அன்றியும், அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களாய்த் தேவனிடத்தில் அன்புகூருகிறவர்களுக்குச் சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறதென்று அறிந்திருக்கிறோம்.”**

அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டால் நம்முடைய வாழ்க்கையிலே நடக்கிற சகலமும் நன்மைக்கேதுவாய் நடக்கிறது. அல்லேலூயா!

உலகத்தின் மக்கள் என்ன சொல்வார்கள் என்றால் “எல்லாம் நன்மைக்கு தான், எல்லாம் நன்மைக்குதான்” என்று. அவர்கள் ஒரு கருத்தை அறிந்து இருக்கிறார்கள். அது என்னவென்றால் அவர்கள் பைபிள் சத்தியத்தை அறிந்து இருக்கிறார்கள். அதனால் வாழ்க்கையில் நடக்கிற எல்லாமே நல்லதுக்குத் தான் என்று அவர்கள் சொல்லுவதை நாம் கேட்கிறோம்.

ஆனால் இங்கே பைபிள் வசனம் என்ன சொல்கிறதென்றால் எல்லோரும் அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்கள் அல்ல.

அல்லேலூயா! அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்கள் யார் என்றால் தெரிந்து கொள்ளப்பட்டவர்களே! அல்லேலூயா! மூவகையான ஜனங்கள் இருக்கிறார்கள். தேவனால் தெரிந்துக்கொள்ளப்பட்டவர்கள், இரட்சிக்கப்பட்டவர்கள், பாவிகள். அனைவரும் இந்த மூன்று வகையினரில் ஒருவராகத் தான் இருக்க வேண்டும்.

உலகத்தில் நீங்கள் எத்தனையோ பேரை பார்க்கிறீர்கள். ஒவ்வொரு நாளும் ஆயிரக்கணக்கான மக்களை நீங்கள் பார்க்கிறீர்கள். நூற்றுக்கணக்கான மக்களை பார்க்கிறீர்கள். அவர்கள் அனைவருமே இந்த மூன்றில் ஏதாவது ஒரு வகையினராகத்தான் இருக்கிறார்கள். அது வெளிநாட்டை சேர்ந்தவர்களாக இருந்தாலும் சரி. யாராக இருந்தாலும் சரி. உலகத்தில் நீங்கள் பார்க்கிற ஒவ்வொரு நபரும் இந்த மூன்றில் ஒரு வகையினராக இருப்பார்கள்.

தெரிந்து கொள்ளப்பட்டவர்கள் பட்டணத்துக்குள் பிரவேசிக்கிறார்கள். இரட்சிக்கப்பட்ட ஜனங்கள் கடைசி உயிர்த்தெழுதலில் வந்து, பட்டணத்துக்கு வெளியே இருக்கிறார்கள். பாவிகளும் அவிசுவாசிகளும் அக்கினிக் கடலில் பங்கடைவார்கள். அதை தான் பைபிள் கூறுகிறது. இது மிக எளிய சத்தியம். அது நிச்சயமாக நடக்கத்தான் போகிறது. தேவனுடைய வார்த்தையானது சத்தியமாக இருக்கிறது. எத்தனை பேர் அதை விசுவாசிக்கிறோம்.

இங்கே இரட்சிக்கப்பட்ட ஜனங்களையோ அல்லது உலகத்தில் இருக்கிற பெயர் கிறிஸ்தவர்களையோ குறித்து சொல்லவில்லை. இந்த வசனத்தில் தேவனால் தெரிந்து கொள்ளப்பட்டவர்களைக் குறித்து தான் சொல்லப்பட்டிருக்கிறது.

பாவிகளுக்கு கடைசி உயிர்தெழுதலில் கூட நித்திய ஜீவன் கிடையாது. அதனால் அவர்களுக்கு சொல்லப்படவில்லை. அவர்களும் எல்லாம் நன்மைக்குத்தான் என்று சொல்வார்கள். அவர்களுக்கு இது சொல்லப்படவில்லை. அவருடைய தீர்மானத்தின்படி

அழைக்கப்பட்டவர்கள் யாரென்றால், தேவனால் தெரிந்துக் கொள்ளப்பட்டவர்களே. ஆமென்!

எசாயா 49:15, 16 ல் பாருங்கள்: **"ஸ்திரீயானவள் தன் கர்ப்பத்தின் பிள்ளைக்கு இரங்காமல், தன் பாலகனை மறப்பாளோ? அவர்கள் மறந்தாலும், நான் உன்னை மறப்பதில்லை.**

**இதோ, என் உள்ளங்கைகளில் உன்னை வரைந்திருக்கிறேன்; உன் மதில்கள் எப்போதும் என்முன் இருக்கிறது."**

ஸ்திரீயானவள் தன் கர்ப்பத்தின் பிள்ளைக்கு இரங்காமல் தன் பாலகனை மறப்பாளோ அவர்கள் மறந்தாலும் நான் உன்னை மறப்பதில்லை. ஸ்திரீயானவள் தன்னுடைய பால் குடிக்கிற குழந்தையை மறக்க மாட்டாள்.

ஒரு வேளை அவள் மறந்துப் போனாலும் கூட இயேசு கிறிஸ்து நம்மை மறக்க மாட்டார். அல்லோலுயா! "உங்களை என் உள்ளங்கையில் வரைந்திருக்கிறேன்" என்று அவர் சொல்லியிருக்கிறார்.

அடுத்தப்படியாக ஏசாயா 54ம் அதிகாரம் 5லிருந்து 7 வரை வாசிக்கலாம்.

**"உன் சிருஷ்டிகரே உன் நாயகர்; சேனைகளின் கர்த்தர் என்பது அவருடைய நாமம், இஸ்ரவேலின் பரிசுத்தர் உன் மீட்பர், அவர் சர்வ பூமியின் தேவன் என்னப்படுவார்.**

**கைவிடப்பட்டு மனம்நொந்தவளான ஸ்திரீயைப்போலவும், இளம்பிராயத்தில் விவாகஞ்செய்து தள்ளப்பட்ட மனைவியைப் போலவும் இருக்கிற உன்னைக் கர்த்தர் அழைத்தார் என்று உன் தேவன் சொல்லுகிறார்.**

**இமைப்பொழுது உன்னைக் கைவிட்டேன்; ஆனாலும் உருக்கமான இரக்கங்களால் உன்னைச் சேர்த்துக் கொள்வேன்."**

இங்கே 5ம் வசனத்திலே என்ன சொல்லப்படிருக்கிறதென்றால் "உன் சிருஷ்டிகரே உன் நாயகர்" என்று.

நம்மில் எத்தனைபேர் இயேசு கிறிஸ்துவிலே விசுவாசியாக இருக்கிறோம். இயேசு கிறிஸ்துதான் உலகத்திலே இருக்கிற எல்லோரையும் உண்டாக்கி இருக்கிறார். அவர்கள் இந்துவாக இருந்தாலும், முஸ்லீமாக இருந்தாலும், யாராக இருந்தாலும், இயேசு கிறிஸ்து எல்லோரையும் உண்டாக்கியிருக்கிறார். அல்லோலுயா! உண்டானது ஒன்றும் அவராலே யன்றி வேறு ஒருவராலும் உண்டாகவில்லை.

ஆனால் அவர் உங்களுடைய நாயகராக இருக்க வேண்டும். நாயகர் என்றால் என்ன அர்த்தம்? அவர் என்னுடைய கணவர் என்று அர்த்தம். புருஷன் என்று அர்த்தம். உங்களை உண்டாக்கின சிருஷ்டிகர் உங்கள் மணவாளனாக மாறியிருக்கிறார்.

அல்லேலூயா!

எல்லோரும் இயேசு கிறிஸ்துவே தங்கள் சிருஷ்டிகர் என்று சொல்லலாம்; நம்பினாலும் நம்பாவிட்டாலும் அவர்தான் சிருஷ்டிகர். ஆனால் அவருடைய மணவாளனாக மாறமுடியாது. என்னை உண்டாக்கிய கர்த்தர் தான் என்னுடைய மணவாளன். அல்லோலூயா!

சேனைகளின் கர்த்தர் என்பது அவருடைய நாமம், இஸ்ரவேலின் பரிசுத்தர் நம்முடைய மீட்பர். அவர் சர்வபூமியின் தேவன் என்னப்படுவார். ஒரே ஒரு தேவன் தான் உண்டு. அவர் நாம் ஆராதிக்கிற கர்த்தரே. அல்லேலூயா!

இயேசு கிறிஸ்துவை தவிர வேறு கடவுள் உலகத்திலேயே கிடையாது. மனிதர்கள் பல கடவுள்களை ஏற்படுத்தியிருக்கிறார்கள்.

ஆனால், கர்த்தர் ஒருவர் தான்.

இஸ்ரவேலே கேள் உன் தேவனாகிய கர்த்தர் ஒருவரே கர்த்தர். மேலே வானத்துக்கும் கீழே பூமியிலும் அவர் இல்லாமல் வேறு ஒருவர் இல்லை. நம்பினாலும் நம்பாவிட்டாலும் அதைப்பற்றி ஒன்றுமே இல்லை. அவிசுவாசமானது தேவனுடைய உண்மையை அவமாக்க முடியாது. தேவனுடைய உண்மையை மேற்கொள்ள முடியாது. பெரும்பான்மை ஜனங்கள் நம்புவதில்லை.

நம்பவில்லையென்றால் பரவாயில்லை. அதனால் ஒன்றும் இல்லை. அதனால் ஆண்டவருக்கு ஒன்றும் பாதிப்பு இல்லை. அவருடைய வார்த்தைக்கு ஒன்றும் பாதிப்பு இல்லை. அவர் ஒருவரே கர்த்தர்.

அவர் யார் நமக்கு? நாம் மட்டும் தான் சொல்ல முடியும், ''அவர் என் நாயகர்'' என்று. அல்லேலூயா! அவர் என் கணவர். அல்லேலூயா! அவர் என்னுடைய மணவாளன்.

அவர் என்ன சொல்கிறார் என்றால் ''இமைப்பொழுதும் உன்னைக் கைவிட்டேன்'' என்று. ஆண்டவர் நம்மை கைவிடவில்லை. ஒரு இமை பொழுது கூட நம்மைக் கைவிடவில்லை. அல்லேலூயா!

எத்தனை பேர் விசுவாசிக்கிறோம்?

நமக்கு கைவிட்ட மாதிரி தெரியும், அது தான் அதன் அர்த்தம். அவர் நம்மை கைவிடவில்லை. அவர் நம்மை மறக்கவுமில்லை. ஆனால் அவர் நம்மை மறந்த மாதிரி தெரியும். கைவிட்ட மாதிரி நமக்குத் தெரியும். ஆனாலும் பைபிளில் என்ன சொல்லப்படுகிறதென்றால், ''உருக்கமான இரக்கங்களால் உன்னை சேர்த்துக் கொள்ளு வேன்''. அல்லேலூயா!

இந்த வசனங்களிலிருந்து நான் உங்களுக்கு கொடுக்கிற செய்தியை நீங்கள் கவனியுங்கள்: **''கர்த்தர் உங்களை ஒரு போதும் மறக்க மாட்டார்''** (God will never forget to you). மனுஷர்கள் மறக்கலாம். ஆனால் தேவன் மறக்கமாட்டார். எத்தனை பேர் விசுவாசிக்கிறோம்.

நம்முடைய வாழ்க்கையிலே நடக்கிற சில சம்பவங்கள் தீமைக்கு ஏதுவாய் இருந்த மாதிரி தெரியலாம். ஆனால் நீங்கள் அவருடைய தெரிந்து கொள்ளப்பட்ட ஜனங்களில் ஒருவராக இருந்தீர்களென்றால், நீங்கள் அவருடைய மணவாட்டியாக இருந்தீர்களென்றால்...

தெரிந்து கொள்ளப்பட்டவர்களாகவோ, மணவாட்டியாகவோ நாம் இருப்போம் என்றால் அவர் நம்மை ஒருபோதும் மறப்பதில்லை. அது தான் கருத்து, இதற்கு தான் இந்த வசனங்களை எல்லாம் வாசித்து இருக்கிறேன்.

முதலாவது, உங்களுடைய அழைப்பைத் தெரிந்துகொண்டு உறுதிப்படுத்த வேண்டும்.

'நான் தேவனால் தெரிந்துக் கொள்ளப்பட்டேன்' என்ற நிச்சயம் உங்களுக்கு வருமென்றால்...

ஆகவே, அருமையானவர்களே, நீங்கள் கவனியுங்கள். உங்களுக்கு மட்டும் அந்த நிச்சயத்தை கர்த்தர் ஏற்படுத்துவார் என்றால், நீங்கள் உங்களை நிச்சயப்படுத்திக் கொள்வீர்களென்றால், 'நான் தேவனால் தெரிந்துக் கொள்ளப்பட்டவன் என்னுடைய பெயர் ஆட்டுக்குட்டியானவரின் ஜீவ புஸ்தகத்தில் இருக்கிறது' என்ற நிச்சயம் மாத்திரம் உங்களுக்கிருந்தால்!

'உலகத் தோற்றத்துக்கு முன்னதாக கிறிஸ்துவுக்குள் தேவன் என்னை தெரிந்துக் கொண்டார்' என்ற நிச்சயம் உங்களுக்கு இருக்குமென்றால், பிரசங்கம் என்பது சும்மா ஏதோ பண்ணுகிறோம் என்று நினைக்காதீர்கள். யாருமே நினைக்காதீர்கள். அது நிச்சயம் உங்களுக்கு இருக்குமென்றால், அருமையானவர்களே, கர்த்தர் உங்களுடைய வாழ்க்கை யிலே எப்பொழுதும் உங்களைப் பார்த்துக்கொண்டேயிருக்கிறார். உங்களைக் கவனித்துக் கொண்டேயிருக்கிறார்.

உங்களுடைய ஒவ்வொரு அசைவையும் கர்த்தர் கவனித்துக் கொண்டேயிருக்கிறார். எப்பொழுது என்றால் நீங்கள் தேவனால் தெரிந்துக் கொள்ளப்பட்டவர்களாக இருககும் போது. இங்கு இரட்சிக்கப்பட்டவர்களைக் குறித்து சொல்லவில்லை. அல்லது சாதாரண கிறிஸ்தவர்களைப் பற்றி சொல்லவில்லை. அந்த பேச்சுக்கே இங்கே இடம் கிடையாது.

ஆனால், நாம் தேவனால் தெரிந்துக் கொள்ளப்பட்டவர்கள் என்ற நிச்சயம் நமக்குள்ளே இருக்கும் என்றால் நாம் பிறந்த நாள் முதற்கொண்டு ஆண்டவர் நம்மை கவனித்துக் கொண்டேயிருக்கிறார்.

ஆண்டவர் நம்முடைய வாழ்க்கையிலே கிருயை செய்து கொண்டேயிருக்கிறார். அல்லேலூயா!

பவுலுடைய வாழ்க்கையிலே ஆண்டவர் கிருயை செய்தார். யாக்கோபுடைய ஜீவியத்தில் ஆண்டவர் கிருயை செய்தார். அவர்களெல்லாம் தெரிந்து கொள்ளப் பட்டவர்கள் என்று நமக்குத் தெரியும். அதே போல் தான் அவர் மாறாதவராயிருக்கிறார்.

இன்றைக்கு நீங்கள் தேவனால் தெரிந்துக் கொள்ளப்பட்டவர்கள் என்றால், ஆட்டுக்குட்டியானவருடைய ஜீவ புஸ்தகத்தில் உங்கள் பெயர் இருக்குமென்றால் தேவன் உங்களைக் கவனித்துக் கொண்டே இருக்கிறார். அவர் எப்பொழுதும் நம் மேல் நினைவாக இருக்கிறார். எத்தனை பேர் விசுவாசிக்கிறோம்?

நாம் நம்முடைய பிள்ளைகள் மேல் நினைவாக இருக்கிறோம். நமக்கு எத்தனை பிள்ளைகள் இருக்கிறார்களோ அவர்களை எல்லாம் நினைத்துக் கொண்டேயிருக்கிறோம். நம்முடைய பேரப்பிள்ளைகள் மேலே நினைவாக இருக்கிறோம். கர்த்தருடைய கிருபையினாலே எனக்கு ஐந்து பேரப்பிள்ளைகள் இருக்கிறார்கள். இதோ அவர்கள் மேல் நான் நினைவாகத்தான் இருக்கிறேன். என் மனைவி நினைவாகத்தான் இருக்கிறாள். தினமும் அவர்களுக்காக ஜெபிக்கிறோம்.

அப்படி நாம், பொல்லாத தகப்பன்மார்களே அப்படி இருந்தால், இயேசு கிறிஸ்து நல்ல தகப்பனாய் இருக்கிறார். (மத்தேயு 7:11)

அல்லேலூயா!

அவர் நம் மேலே நினைவாய் இருக்கிறார். ஏனென்றால் நாம் அவருடைய தெரிந்து கொள்ளப்பட்டவர்களாக இருக்கிறோம். அல்லேலூயா!

நாம் அவருடைய மணவாட்டியாக இருக்கிறோம். அவருடைய பிள்ளைகளாய் இருக்கிறோம். அதனால் நம் மேல் நினைவாய் இருக்கிறார், நம்மை அவர் மறந்தது போல நமக்குத் தெரியும். அவர் நம்மை நினைக்காதது போல தெரியும். இல்லை!

எப்படி ஒரு சாதாரணத் தகப்பன், அதாவது நாமெல்லாரும் பொல்லாதவர்கள் என்று பைபிளில் எழுதப்பட்டிருக்கிறது. பொல்லாதவர்களாகிய நீங்களே உங்கள் பிள்ளைகள் மேல் அன்பு வைத்தீர்களென்றால் தேவன் எவ்வளவோ நினைவுள்ளவராய் இருக்கிறார்.

அல்லேலூயா!

இதோ பரலோகபிதா நம்மேல் மிகுந்த அன்பாய் இருக்கிறார் என்பதை நீங்கள் நினைவு கூருங்கள். மனிதர்கள் சில நேரங்களிலே நம்மை மறந்து விடலாம். ஆனால் கர்த்தர் ஒருபோதும் நம்மை மறக்கமாட்டார்.

ஆமென்!

ஒரு நண்பர் நம்மிடத்திலே அணுகி நமக்கு ஒரு உதவி செய்ய வேண்டுமென்று கேட்கலாம். நேற்றைய தினத்திலே ஒரு நண்பனை நான் சந்தித்தேன். அவர் ஸ்தாபன நண்பர். அவருக்கு சத்தியம் சொல்லியிருக்கிறேன். புஸ்தகமும் கொடுத்திருக்கிறேன். அவர் ஒரு ஸ்தாபன நண்பர் ஆவார்.

ஆனால், அவர் எனக்காக எதையும் செய்ய ஆயத்தமாக இருக்கிறார். ''உங்களுக்கு நான் எந்த உதவியும் செய்கிறேன்'' என்கிறார். நான் அவருக்கு ஒரு காரியம் சொன்னேன். ''அந்த விஷயத்தில் உங்களுக்காக எந்த உதவியும் நான் செய்கிறேன்'' என்று கூறினார். அப்படியானால் அவர் எவ்வளவோ பெரிய நண்பராய் இருக்கிறார் என்று நான் யோசித்தேன்.

இன்னொரு நண்பர் இதே செய்தியில் ஊழியக்காரர். அந்த ஊழியக்காரரிடம் வந்து காரியத்தை சொன்னபோது, இந்த விஷயம் எப்படி என்று கேட்டு, அவர் பலவிதமான தவறான காரியங்களைச் சொல்லி குழப்புகிறார். என்னைக் கொண்டு கண்ணியில் மாட்டப் பார்க்கிறார். ஆனால், அவர் செய்தியில் இருக்கிறார். ஒவ்வொரு மாதமும் வருகிறார். என்னைச் சந்திக்கிறார். என்னோடு ஐக்கியப்படுகிறார்.

ஆனால், அவருடைய வழிகள் குழப்பமாக இருக்கிறது. செய்தியில் இருக்கிற ஒரு ஊழியக்காரர் அப்படி இருக்கிறார். ஸ்தாபனத்தில் இருக்கிற போதகர் அவ்வளவு அன்பு காண்பிக்கிறார் என்று சொல்லும் போது வித்தியாசமாக இருக்கிறது என்று நமக்கு தெரிகிறது. ஒரு நண்பரிடம் போய் ஒரு காரியத்தை கேட்கும்போது, ''இந்த காரியத்தில் நீங்கள் தான் எனக்கு உதவி செய்ய வேண்டும். நான் வேறு யாரிடமும் போகவில்லை. உங்களை தான் நம்பியிருக்கிறேன்'' என்று சொல்லும் போது அந்த நண்பர் நமக்காக எவ்வளவு பணத்தையும் செலவு பண்ண ஆயத்தமாக இருக்கிறார். நேரத்தையும் செலவு பண்ண ஆயத்தமாக இருக்கிறார்.

அவர் சொந்த வேலைகளையெல்லாம் விட்டுவிட்டு நமக்காக மெனக்கெட்டு வந்து அலைந்து திரிந்து இதையெல்லாம் நமக்காக செய்து கொடுக்கிறார். ஒரு நண்பர் அவ்விதமாக செய்யும்போது சில நேரங்களில் உதவியைப் பெற்றவர் என்ன செய்வார்கள் என்றால் வேலை முடிந்தவுடனே, உதவியைப் பெற்றவுடனே, ''மிகவும் நன்றி'' என்று சொல்லிவிட்டு அப்படியே போய்விடுவார்கள். அதன்பிறகு எட்டியே பார்க்கமாட்டார்கள்.

பாருங்கள். இது தான் மனிதனின் நிலைமை. நாம் நன்றி மறக்கக்கூடாது. கர்த்தர் நமக்கு செய்த நன்மைகளை மறக்கக்கூடாது. கர்த்தருடைய பிள்ளைகள் நமக்கு செய்கிற உதவியையும் நாம் மறக்கக்கூடாது.

உதவியைப் பெற்றவர்கள், ''மிக்க நன்றி'' என்று சொல்லிவிட்டு அப்படியே போய் விடுவார்கள். அப்பொழுது என்ன ஆகிறது என்றால் நம்மை மறந்தே விடுவார்கள்.

கர்த்தருடைய கிருபையினால் எத்தனையோ பேருக்கு விவாகம் நடத்த ஆண்டவர் உதவி செய்திருக்கிறார். நம்முடைய சபையில் அநேக விவாகங்களை நடத்த உதவி செய்திருக்கிறார். அவர்களுடைய பிள்ளைகளை பிரதிஷ்டை பண்ணும்படியாக உதவி செய்திருக்கிறார். இதோ அவர்களுக்காக ஜெபிக்கவும், நல்ல ஆலோசனை சொல்லி அவர்களை ஊக்கப்படுத்தவும் ஆண்டவர் என்னைப் பயன்படுத்தியிருக்கிறார்.

நான் அல்ல கர்த்தர், கர்த்தர் என்னை பயன்படுத்தியிருக்கிறார்.

ஆனால் அவர்கள் எல்லாம் இப்பொழுது மறந்து சில நேரங்களில் பின்வாங்கி, நமக்கு விரோதியாகக்கூட மாறியிருக்கிறார்கள். அதற்கு என்ன சொல்லமுடியும். ஒரு காலத்தில் ஐக்கியப்பட்டார்கள். எத்தனையோ காரியத்தில் அவர்களுக்காக பரிந்து பேசி, அவர்கள் நன்றாயிருக்க வேண்டும் என்றும், ஆசீர்வாதமாய் இருக்க வேண்டும் என்றும், சந்தோஷமாய் இருக்க வேண்டும் என்றும், ஆவிக்குரிய விதமாய் பலமாய் இருக்க வேண்டும் என்றும் பிரயாசப்பட்டேன். எல்லாருக்கும் அப்படித்தான் பிரயாசப்பட்டிருக் கிறேன்.

ஆனால், அநேகர் காலகாலமாக என்ன செய்கிறார்கள் என்றால், அப்படியே வருஷம் ஆக ஆக ஒவ்வொரு வருஷத்திலேயும் நன்றி மறந்து போகிறார்கள். அப்பொழுது நான் என்ன நினைக்கிறேன் என்றால், 'நான் அவர்களுக்காக அதை செய்யவில்லை' என்று.

அல்லேலூயா! நான் யாருக்காக செய்தேன்? கர்த்தருக்காக அதை செய்தேன்.

அல்லேலூயா!

அவர்களுக்காக நான் செய்தேன் என்று நினைத்தேன் என்றால் எனக்கு ஒரு மனஸ்தாபம் ஏற்படும். 'நன்றி மறந்து போனார்களே' என்று எண்ண வேண்டி வரும், நான் கர்த்தருக்காக அதை செய்தேன். அல்லேலூயா!

கர்த்தர் என்னை அப்படி செய்யும்படியாக வைத்திருக்கிறார். எனக்கு அந்த கிருபையை தந்திருக்கிறார். இன்னும் திருமணமாகாத எல்லோருக்குமே திருமணம் நடத்தி வைக்க வேண்டும் என்று நான் விருப்பப்படுகிறேன். இன்னும் குழந்தை பெறாதவர் களுடைய குழந்தைகளை நான் பிரதிஷ்டை செய்ய வேண்டும் என்று நான் விருப்பப்படுகிறேன். அது என்னுடைய வாஞ்சை. எனக்கு அந்த கிருபையை ஆண்டவர் தர வேண்டும் என்று நினைக்கிறேன்.

நீங்கள் எல்லோரும் நல்ல சாட்சியை சொல்ல வேண்டும். 'கர்த்தர் எங்களை ஆசீர்வதிக்கிறார்' என்று சொல்ல வேண்டும் என்று எதிர்பார்க்கிறேன். யாரும் கெட்டுபோக வேண்டும் என்று நினைக்கவில்லை. துர்செய்தியை நான் எதிர்பார்க்கவில்லை. நான் அதை விரும்பவில்லை.

நான் உங்களிடம் எதிர்பார்க்கிறது என்னவென்றால், நல்ல செய்தியை வந்து சொல்லுகிறீர்களா என்று எதிர்பார்க்கிறேன். துர்செய்தி கேட்டு வேதனை தான் அடைய வேண்டும். ''பாஸ்டர் உங்களிடம் ஒன்று பேசவேண்டும். அது இப்படி ஆயிற்று. அப்படி ஆயிற்று, அவர்கள் அப்படி பண்ணிட்டாங்க'' என்று சொல்வார்கள். இதை நான் கேட்க விருப்பப்படவில்லை. ஆனால், பாஸ்டரிடம் சொல்ல வேண்டுமா? சொல்ல வேண்டும். நான் அந்த மாதிரி செய்தியை எதிர்ப்பார்க்கவில்லை. அவர் வந்து நல்ல செய்தியை சொல்ல வேண்டும். ''கர்த்தர் ஆசீர்வதித்தார். கர்த்தர் பிரச்சனையை தீர்த்தார்'' அப்படி சொல்ல வேண்டும் என்று எதிர்பார்க்கிறேன். அல்லேலுயா! அதெல்லாம் யாருக்காக செய்கிறேன்.

நம்மிடத்திலிருந்து இந்த நன்மைகளை பெற்றவர்கள் நம்மை மறக்கலாம். அதனால் நாம் மனஸ்தாபப்படுவதில்லை. அல்லேலூயா! ஏனென்றால் நான் அதை அவர்களுக்காக செய்யவில்லை. கர்த்தருக்காகத் தான் அவர்களுக்கு உதவிச் செய்தேன்.

அல்லேலூயா!

அவர்கள் கர்த்தருடைய வார்த்தையை, இயேசுவை நேசித்ததினால் நான் அவர்களுக்கு அதை செய்தேன். அப்படி என்று நினைக்கும் போது அவர்கள் அதை மறந்து விட்டார்களே என்று நினைக்க எனக்கு எந்த வாய்ப்பும் இல்லை. அது மாத்திரம் அல்ல. நான், 'அப்படி மறந்து விட்டார்களே' என்று நினைக்கும்போது கர்த்தர் அதை மறக்கிறதில்லை. அல்லேலூயா!

நாம் செய்கிற நல்ல காரியங்களை கர்த்தர் மறக்கிறது இல்லை. எத்தனை பேர் அதை விசுவாசிக்கிறோம். நம்முடைய இருதயத்தில் என்ன வாஞ்சையிருக்கிறது என்று பார்க்கிறார். 'இவன் உண்மையான மனதோடு செய்கிறானா? முழுமனதோடு அன்போடு செய்கிறானா?' என்று பார்க்கிறார் ஆண்டவர். சிலர் மற்றவர்களுக்கு உதவி செய்கிற மாதிரி நினைத்து அவர்களுக்கு விரோதமாகவே அவைகளைச் செய்வார்கள்.

அதனால் கர்த்தர் அந்த காரியங்களை வாய்க்கப் பண்ண மாட்டார். ஒருவருக்கு ஏதாகிலும் செய்ய வேண்டுமென்றால் இருதயத்திலிருந்து அன்போடு செய்ய வேண்டும். அன்போடு அதை செய்யாமல் உள்ளுக்குள் விரோதத்தை வைத்துக் கொண்டு அதை செய்யக்கூடாது. அவர்களுக்கு இயேசு கிறிஸ்து உதவி செய்ய மாட்டார். 'சபைக்கு ஒரு விசுவாசி வரும்போது அவர்கள் நல்ல ஆவியோடு வர வேண்டும். அவர்கள் சந்தோஷமாக இருக்க வேண்டும். அவர்கள் ஆசீர்வதிக்கப்பட வேண்டும். அவர்களுடைய பிள்ளைகள் சமாதானமாய் இருக்க வேண்டும்.' இந்த மாதிரி

நினைக்கும்போது ஆண்டவர் அந்த இருதயத்தைப் பார்க்கிறார். அப்படிப்பட்ட இருதயம் நம் எல்லோருக்கும் தேவை. ஒரு வேளை அப்படி நாம் உண்மையான இதயத்தோடு அதை செய்தும், அவர்கள் மறந்து போனால் - அவர்கள் நன்றி என்று சொல்லி விட்டு அப்படியே போய்விட்டால், அல்லது அவர்கள் கர்த்தரையே மறந்து, பாஸ்டரையும் மறந்து போனாலும் கர்த்தர் மறப்பது இல்லை. எத்தனைபேர் விசுவாசிக்கிறோம். தேவன் ஒருபோதும் மறப்பது இல்லை. அல்லேலூயா!

எனவே நிச்சயமாக நமக்கு பலன் உண்டு. நாம் எதை செய்தாலும் மனிதனுக்கு என்று செய்யாமல் கர்த்தருக்கு என்றே அதை செய்யவேண்டும். கொலோசெயர் 3:24: **"எதைச் செய்தாலும், அதை மனுஷர்களுக்கென்று செய்யாமல், கர்த்தருக்கென்றே மனப்பூர்வமாய்ச் செய்யுங்கள்"**

இவர்கள் கர்த்தருடைய பிள்ளையாக இருக்கிறார்கள். கர்த்தரை நேசிக்கிறார்கள், வார்த்தையை விசுவாசிக்கிறார்கள், அப்படி நாம் செய்யும்போது, ஒரு வேளை அவர்கள் இதை மறந்தாலும் இயேசு கிறிஸ்து மறப்பதில்லை. அல்லேலுயா!

நாம் செய்யும் கிருயைகளுக்கு பலன் உண்டு. எத்தனைபேர் விசுவாசிக்கிறோம். இது தான் உண்மையான மணவாட்டி என்று சொல்வது. உங்களுடைய நோக்கம் நல்லதாயிருக்க வேண்டும். உங்களுடைய செயல்பாடுகள் அதைக்காட்டிக் கொடுத்துவிடும். இவர்கள் இருதயத்திலிருந்து செய்கிறார்களா வித்தியாசமாக செய்கிறார்களா என்று சரியாக தெரியும். அதனால் பாருங்கள். அதை கர்த்தருக்கு என்று செய்தோம் என்றால் கர்த்தர் அதை மறப்பதில்லை. அல்லேலுயா! எதை செய்தாலும் மனுஷனுக்கு என்று செய்யாதபடி கர்த்தருக்கு என்று செய்வோம். மனுஷன் மறந்து போகலாம். ஆனால் கர்த்தர் மறக்க மாட்டார். அல்லேலூயா!

ஏனென்றால் நாம் அவருடைய தெரிந்து கொள்ளப்பட்ட பிள்ளைகளாக இருக்கிறோம். அல்லேலூயா! அப்படியே தெரிந்து கொள்ளப்பட்டவர்களை தேவன் மறப்பதில்லை.

## யோசேப்பு மறக்கப்படுதல்

இப்போது யோசேப்புடைய ஜீவியத்திலிருந்து இருந்து இரண்டு சாட்சிகளை சொல்லப் போகிறோம். யோசேப்பு இரண்டு முறை மறக்கப்பட்டான். கவனித்து பாருங்கள். யோசேப்பு இரண்டு முறை மறக்கப்பட்டான். இரண்டு முறையும் அது ஆசீர்வாதமாகவே முடிந்தது. யோசேப்பு நல்லவன். அவன் நல்லது செய்ய வேண்டும் என்று மனதில் எண்ணமுடையவன். மற்றவர்களுக்கு ஆசீர்வாதமாய் இருக்க வேண்டும் என்று நினைக்கிறவன். எதை செய்தாலும் தனக்கு என்று செய்யாதபடி, மனுஷனுக்கு என்று செய்யாதபடி கர்த்தருக்கு என்றே செய்கிறவன். அல்லேலுயா!

பாருங்கள், அந்த மாதிரியான மனப்பான்மை இன்றைக்கு நமக்கு அவசியம். செய்தியின் உச்சக்கட்டத்தில் வந்திருக்கிறோம். ஆனாலும் நம்முடைய மனப்பான்மை அவ்விதமாய் இருக்க வேண்டும்.

யோசேப்பு நமக்கு ஒரு உதாரணமாக இருக்கிறான். யோசேப்பு மனுஷனுக்கு என்று செய்யாதபடி கர்த்தருக்காக எல்லாம் செய்தான். அவன் இரண்டு முறை மறக்கப்பட்டான். அப்படி மறந்ததும் நல்லதாகவே இருந்தது. தேவன் மறக்கவில்லை. தேவன் அவனை ஆசீர்வதித்தார்.

முதலாவது நாம் பார்க்கும்போது அவன் சிறைச்சாலையிலே இருக்கிறான். ஆதியாகமம் 40ம் அதிகாரம் 7-ம் வசனத்திலிருந்து 15-ம் வசனம் வரை வாசிக்கும்போது, அவன் சிறைச்சாலையில் இருக்கிறான். சிறைச்சாலையில் இருக்கும்போது இரண்டு பேர் சொப்பனம் காண்கிறார்கள். பானபாத்திரக்காரனும், சுயம்பாகியும் சொப்பனம் கண்டு, அதற்கு அர்த்தம் சொல்வதற்கு ஒருவரும் இல்லாதபடியால் துக்கமாய் இருந்தார்களென்று 7ம் வசனத்திலே வாசிக்கிறோம்.

அப்பொழுது யோசேப்பு, ‘‘நீங்கள் ஏன் துக்கமாய் இருக்கிறீர்கள். இன்றைய தினத்திலே நீங்கள் ஏன் துக்கமாய் இருக்கிறீர்கள்’’ என்று அந்த கைதிகளைப் பார்த்து கேட்கிறான். இவனும் ஒரு கைதிதான். அதற்கு அவர்கள் 8ம் வசனத்திலே, ‘‘நாங்கள் சொப்பனம் கண்டோம். ஆனால் அதற்கு அர்த்தம் சொல்வதற்கு யாருமே இல்லை’’ என்று கூறுகிறார்கள். அப்படி அவர்கள் சொல்லும்போது, யோசேப்பு என்ன சொல்கிறான் என்றால்: ‘‘அர்த்தம் சொல்வது மனிதனால் கூடாது. நீங்கள் சொப்பனம் கண்டால் மனிதனால் அர்த்தம் சொல்ல முடியாது. சொப்பனத்திற்கு யார் அர்த்தம் சொல்லவேண்டும்? கர்த்தர் தான் சொல்ல வேண்டும்.’’ அல்லேலூயா!

சொப்பனத்திற்கு அர்த்தம் சொல்வது கர்த்தருக்குரியது, மனுஷனுக்குரியது அல்ல. ‘‘சொப்பனத்துக்கு அர்த்தம் சொல்லுதல் தேவனுக்குரியதல்லவா? அவைகளை என்னிடத்தில் சொல்லுங்கள்’’ என்று யோசேப்பு கூறுகிறான். அல்லேலூயா!

ஆனால் சொப்பனம் நிறைவேறுதலே அதன் வியாக்கியானம். ஆமென்!

9ம் வசனம் என்ன சொல்கிறதென்றால் அந்த பானபத்திரக்காரனுடைய தலைவன் சொப்பனத்தைச் சொல்கிறான். ‘‘ஒரு திராட்சச் செடி எனக்கு முன்பாக இருந்தது. அதிலே மூன்று கொடிகள் இருந்தது. திராட்சை பழங்கள் பழுத்திருந்தது. நான் அந்த பழங்களை பறித்து, அதை திராட்சை ரசமாகப் பிழிந்து பாத்திரத்தில் கொண்டு போய் பார்வோனுக்கு கொடுத்தேன்’’ என்று தன்னுடைய சொப்பனத்தைச் சொன்னான்.

12ம் வசனத்திலிருந்து யோசேப்பு அர்த்தம் சொல்கிறான். கர்த்தர் யோசேப்புக்கு சொப்பனத்தின் அர்த்தத்தை கொடுக்கிறார். அவன் தேவனால் தெரிந்துக் கொள்ளப் பட்டவன். அதனால் அவன் என்ன அர்த்தம் சொல்கிறான் என்றால், ‘‘மூன்று கொடிகளும் மூன்று நாளாம் (வசனம் 12), அதனால் மூன்று நாளைக்குள்ளே பார்வோன் உன் தலையை உயர்த்தி, மறுபடியும் உன்னை மேலே உயர்த்துவார். பானம் கொடுத்து வந்த வழக்கத்தின்படி பார்வோனின் பாத்திரத்தை அவர் கையிலே கொடுப்பாய் (வசனம் 13)’’ என்று கூறுகிறான்.

இதோ மூன்று நாள். அந்த மூன்று நாளைக்குள்ளே பார்வோன் உன்னை மறுபடியும் வேலைக்குக் கூப்பிடுவான். நீ வந்து திராட்சைப் பழத்தை பிழிந்து அந்த திராட்சை ரசத்தை ராஜாவுக்கு மறுபடியும் கொடுப்பாய். நீ பானபாத்திரக்காரனுடைய வேலையை மறுபடியும் செய்வாய். நீ ராஜா முன்னதாக, ராஜா சமூகத்திலேயே போய் நிற்பாய். இது தான் சொப்பனத்தின் அர்த்தம் என்று சொல்லும்போது அவன் என்ன சொல்கிறான் என்றால், ‘‘என்னை மறக்காதே’’ என்று சொல்கிறான்.

14ம் வசனத்தை வாசிக்கலாம்.

**‘‘இதுதான் அதின் அர்த்தம் என்று சொன்னதும் அன்றி, நீ வாழ்வடைந்திருக்கும் போது, என்னை நினைத்து, என் மேல் தயவு வைத்து, என் காரியத்தைப் பார்வோனுக்கு அறிவித்து, இந்த இடத்திலிருந்து என்னை விடுதலையாக்க வேண்டும்.’’**

‘‘நீ வாழ்வடைந்திருக்கும்போது, நீ ராஜாவின் சமூகத்திலே நிற்கும்போது, உனக்கு பழையபடி உனக்கு விடுதலை கிடைத்து நீ பானபாத்திரக்காரனாக இருக்கும்போது நீ வாழ்வடைந்திருக்கும் போது என்னை நினைத்துப்பார். நான் உனக்கு சொப்பனத்திற்கு அர்த்தம் சொல்லியிருக்கிறேன். நீ இந்த சொப்பத்தை நினைத்துப்பார். நான் உனக்கு உதவிச் செய்திருக்கிறேன். நீ என்னிடமிருந்து நன்மையைப் பெற்றிருக்கிறாய். அதனால் நீ என்னை நினைத்துப் பார்த்து, இதை பார்வோனுக்கு அறிவித்து, நீ இந்த இடத்திலிருந்து என்னை விடுதலையாக்க வேண்டும். நான் சிறைச்சாலையிலே இருக்கிறேன். பாதாள சிறையிலே இருக்கிறேன். அடித்தள அறையிலே (basement) இருக்கிறேன். அதனால் என்ன செய்யவேண்டுமென்றால் என்னை நினைத்து இந்த பாதாளச் சிறைச்சாலை யிலிருந்து என்னை விடுதலையாக்க வேண்டும். நான் எபிரேய தேசத்திலே இருந்து களவாய் கொண்டு வரப்பட்டவன். என்னுடைய சகோதரர்கள் என்னை விற்று

போட்டார்கள்'' என்பதை சுருக்கமாக சொல்கிறான். ''நான் களவாய் கொண்டு வரப்பட்டவன்'' என்று அதை மறைமுகமாக சொல்கிறான்.

''அது மாத்திரமல்ல காவல் கிடங்கில் வைக்கும்படி நான் இவ்விடத்திலே ஒரு தப்பும் செய்யவில்லை. அந்த போத்திபாரின் மனைவி அநியாயமாக குற்றம் சாட்டி அவளே என்னைச் சிறைச்சாலையிலே போட்டுவிட்டாள்.'' மறைமுகமாக சொல்கிறான். ''நான் இதிலே வருத்தப்படுவதற்கு எந்த விதமான தவறும் செய்யவில்லை. அநியாயமாக என்மேல் தீர்ப்பு சொல்லப்பட்டு, அநியாயமாக நான் இங்கே வந்திருக்கிறேன். இதனால் சிறைச்சாலையிலே என்னைப் போட்டிருக்கிறார்கள். நீ ராஜாவிடம் போய் சொல்லி என்னை வந்து விடுதலையாக்க வேண்டும்'' என்று அவன் அவ்விதமாகச் சொல்லி, ''நீ ராஜாவை தினமும் பார்க்கிறாய். ராஜா ஒரு ஆணை பிறப்பித்தால் முடிஞ்சி போச்சு. அந்த நிமிஷத்தில் நான் விடுதலையாகி விடுவேன். அதனால் நீ ராஜாவிடம் போய் சொல்லி இதேபோல் சிறைச்சாலையிலே இருக்கும்போது எனக்கு ஒருவன் சொப்பனத்திற்கு அர்த்தம் சொன்னான். அவன் அநியாயமாய் சிறைச்சாலையிலே அடைக்கப்பட்டிருக்கி றான். அவன் எபிரேயப்புருஷன். அந்த இடத்திற்கு வருவதற்கு அவனுக்கு எந்தவிதமான குற்றச்சாட்டும் அவன்மேலே இல்லை என்று சொல். இது நியாயம் தான், நீ நியாயத்தை சொல், அநியாயமான தவறுக்கு நீ போய் வழக்காட வேண்டாம். நான் ஒரு கொலை செய்துவிட்டு வரவில்லை. அல்லது திருடிவிட்டு வரவில்லை. அல்லது யாருக்காவது ஏதாவது துரோகம் பண்ணிவிட்டு இங்கே வரவில்லை. எந்த விதமான காரணமும் கிடையாது. நீ வாதாடுகிறபோது நீ சுயாதீனமாக (free) வாதாடலாம். அதிலே நியாயம் இருக்கிறது'' என்று சொல்லும்போது, அவன், ''சரி, சரி'' என்றான். ''உனக்கு நன்றி'' என்று சொல்லி விட்டு போய்விட்டான்.

மறந்துவிட்டான். மனுஷன் நன்மைகளை பெற்றுவிட்டு, ''மிகவும் நன்றி'' என்று சொல்கிறான். நானும் சொல்லத்தான் செய்வேன். நானும் கூட மறந்திடலாம். நாமும் சில நேரங்களில் அப்படி செய்திருக்கலாம். நானும் அப்படி செய்திருக்கலாம். கர்த்தருக்கு எல்லாமே தெரியும்.

நீங்களும் செய்திருக்கலாம். யாருமே, ''நான் அப்படி இல்லை'' என்று சொல்ல முடியாது. சில சமயங்களில் நீங்களும் அப்படி செய்திருக்கலாம். ஆனால் அவன் மறந்து விட்டான். அதை இயேசுகிறிஸ்து மறக்கவில்லை.

அல்லேலூயா! கர்த்தர் மறக்கவில்லை. அல்லேலூயா!

ஆனால், நாம் முழுமனதோடுதான் செய்கிறோம். அவன், இவன் மூலமாக நன்மையைப் பெற்றான். நன்மையைப் பெற்றவன் மறந்து இருக்கலாம். இவன் அதை மனுஷனுக்கு என்று செய்யவில்லை. கர்த்தருக்கு என்று செய்திருக்கிறான். அல்லேலூயா!

நாம் எதை செய்தாலும் கர்த்தருக்கு என்று செய்கிறோம். அல்லேலூயா! நம்முடைய நன்மைக்காகச் செய்யவில்லை. கர்த்தருக்காக நாம் செய்கிறோம். அல்லேலூயா!

ஒருவரை சமாதானப்படுத்துவது, ஒருவர் சுகவீனமாக இருந்தால், அவருக்காக ஜெபிப்பது, எல்லாமே மனுஷனுக்காக அல்ல. நாம் கர்த்தர் மேலே உள்ள அன்பிலே தான் செய்கிறோம். ஒரு வேளை அந்த நன்மையை பெற்றவன் மறந்து இருக்கலாம். ஆனால் கர்த்தர் ஒருபோதும் மறக்க மாட்டார். அல்லேலூயா! நாம் அதை கர்த்தருக்கு என்று செய்தால் அவர் ஒரு போதும் மறக்க மாட்டார். எனக்காக நீங்கள் சபைக்கு வந்தால் நீங்கள் போய்விடலாம். நீங்கள் கர்த்தருக்காக, அவருடைய வார்த்தைக்காக வந்தால் நீங்கள் போய்விட மாட்டீர்கள்.

அல்லேலூயா!

உங்கள் அன்பு மாயமற்றதாய் இருக்க வேண்டும். அதனால் பாருங்கள் யோசேப்புடைய அன்பு சரியானது தான். பானபாத்திரக்காரனின் காரியம் நடந்துவிட்டது. அவ்வளவுதான். அவன் சந்தோஷமாக இருக்கிறான். 23ம் வசனத்தை வாசிக்கலாம்.

**"ஆனாலும் பானபாத்திரக்காரரின் தலைவன் யோசேப்பை நினையாமல் அவனை மறந்து விட்டான்."** ஆனால், கர்த்தர் மறக்கவில்லை. அல்லேலுயா!

இரண்டு வருடம் ஆகிப்போயிற்று. இரண்டு வருடம் ஞாபகமே வரவில்லை. மூன்று நாளைக்குள்ளே நீ போய் விடுவாய் என்று சொன்னான். மூன்று நாளைக்குள்ளே போய் விட்டான். சொப்பனத்திற்கு அர்த்தம் சொல்லி அதிக நாள் ஆகவில்லை. மூன்று நாளைக்குள் நிறைவேறிவிட்டது. ஒரு நாள், இரண்டு நாள் அல்ல, மூன்றே நாள். அவனுக்கு எப்படி மறந்து போயிருக்கும்? ரொம்ப நாள் கழித்து நிறைவேறினால் ஒருவேளை மறந்து போயிருக்கலாம். உடனே நிறைவேறியிருக்கிறதே. மறப்பதற்கு வாய்ப்பே இல்லையே. அவனோ மறந்து விட்டான். எத்தனை வருடம் மறந்து விட்டான். இரண்டு வருஷம் மறந்து விட்டான். ஒரு வார்த்தையும் ராஜாவிடம் போய் யோசேப்பை பற்றி பேசவே இல்லை.

இப்பொழுது ராஜாவிற்கு ஒரு சொப்பனம் வருகிறது. அந்த சொப்பனத்தை சொல்வதற்கு நமக்கு நேரமில்லை. அந்த சொப்பனம் நம்முடைய மையப்பொருள் கிடையாது. ராஜாவுக்கு சொப்பனம் வந்தபோது, அந்த ராஜா ஜோசியக்காரர்கள் எல்லோரையும் கூப்பிடும்போது ஒருவராலும் அதற்கு அர்த்தம் சொல்லமுடியவில்லை.

அல்லேலூயா! ஏன் சொல்லமுடியவில்லை. வியாக்கியானப்படுத்துதல் கர்த்தருக்கு மாத்திரம்தான் உரியது. அல்லேலூயா!

வியாக்கியானப்படுத்துதல் கர்த்தருக்கு மாத்திரம்தான் உரியது. மனுஷனுக்கு உரியது அல்ல. அதனால் எந்த ஜோசியக்காரனும் எந்த மந்திரவாதிகளும், குறி சொல்கிறவர்களும் சொப்பனத்திற்கு அர்த்தம் சொல்ல முடியாது. அதனால் இப்பொழுது என்ன சம்பவித்ததென்றால், பார்வோன் கலங்கி போய் நிற்கிறான். என்ன நடக்கப் போகிறது. எனக்கு ஒரே மாதிரி இரண்டு சொப்பனங்கள் வந்திருக்கிறது. ஆனால் ஒருவருக்கும் அர்த்தம் சொல்லத் தெரியவில்லையே என்று சொல்லி அவன் மிகவும் கலங்கிபோய் இருக்கும்போது இந்த நேரத்தில் தான் பானபாத்திரக்காரனுக்கு ஞாபகத்திற்கு வருகிறது. அல்லேலூயா! பானபாத்திரக்காரனுக்கு இப்பொழுது தான் நினைவுக்கு வந்து விட்டது. நினைவு வந்து என்ன செய்கிறான் என்றால் ராஜாவிடம் போய் இப்போது தான் பேசுகிறான். 9ம் வசனத்தை வாசிக்கலாம். 41ம் அதிகாரம் 9ம் வசனம்:

**"அப்பொழுது பானபாத்திரக்காரரின் தலைவன் பார்வோனை நோக்கி: நான் செய்த குற்றம் இன்றுதான் என் நினைவில் வந்தது."**

அது என்ன குற்றம்? நன்றி மறந்தது. யோசேப்பை மறந்தது. இப்பொழுது தான் எனக்கு அந்த குற்றம் நினைவிலேயே வருகிறது. பார்வோன் தம்முடைய ஊழியக்காரர் மேல் கடுங்கோபங்கொண்டு, என்னையும் சுயம்பாகிகளின் தலைவனையும் தலையாரிகளின் அதிபதி வீடாகிய சிறைச்சாலையில் வைத்திருக்கும்பொழுது, சொப்பனம் கண்ட போது யோசேப்பு என்னும் ஒரு எபிரேய புருஷன் அந்த சொப்பனத்திற்கு மிகச் சரியாக அர்த்தம் சொன்னான். சுயம்பாகிக்கும் சொன்னான். இரண்டு பேருக்கும் சரியாக நிறைவேறிற்று. 13ம் வசனத்தை வாசிக்கலாம்:

**"அவன் எங்களுக்குச் சொல்லிய அர்த்தத்தின்படியே நடந்தது; என்னைத் திரும்ப என் நிலையிலே நிறுத்தி, அவனைத் தூக்கிப்போடுவித்தார் என்றான்."**

சொன்னபடியே சரியாக நடந்தது. மூன்று நாட்களில் நடந்தது. எவ்வளவு மிகச்சரியாக நடந்தது. நான் மறுபடியும் வேலைக்கு வந்து விட்டேன். சுயம்பாகி தூக்கிப் போடப்பட்டான். அப்பொழுது பார்வோன் யோசேப்பை அழைப்பித்தான்.

14ம் வசனத்தை வாசிக்கலாம்: **"அப்பொழுது பார்வோன் யோசேப்பை அழைப்பித்தான்; அவனைத் தீவிரமாய்க் காவல்கிடங்கிலிருந்து கொண்டு வந்தார்கள். அவன் சவரம் பண்ணிக்கொண்டு, வேறு வஸ்திரம் தரித்து, பார்வோனிடத்தில் வந்தான்."**

15-ம் வசனம்: **"பார்வோன் யோசேப்பை நோக்கி: ஒரு சொப்பனம் கண்டேன்; அதின் அர்த்தத்தைச் சொல்ல ஒருவரும் இல்லை; நீ ஒரு சொப்பனத்தைக் கேட்டால், அதின் அர்த்தத்தைச் சொல்லுவாய் என்று உன்னைக்குறித்து நான் கேள்விப்பட்டேன் என்றான்."**

நீ சொப்பனத்திற்கு அர்த்தம் சொல்வாய் என்று பார்வோன் சொல்லும்போது அதே வார்த்தையை தான் இங்கேயும் சொல்கிறான். அவர்களுக்கு அர்த்தம் சொல்லும்போது சொன்ன அதே வார்த்தையை தான் இங்கேயும் சொல்கிறான். 16ம் வசனத்தை வாசிக்கலாம்:

**"அப்பொழுது யோசேப்பு பார்வோனுக்குப் பிரதியுத்திரமாக: நான் அல்ல, தேவனே பார்வோனுக்கு மங்களமான உத்தரவு அருளிச்செய்வார் என்றான்."**

நான் அல்ல, அர்த்தம் சொல்வது எனக்குரியது கிடையாது. அது மனுஷனுக்குரியது கிடையாது. அர்த்தம் சொல்வது தேவனுக்குரியது.

அல்லேலூயா!

தேவன் தாமே பார்வோனுக்கு மங்களமான உத்தரவு அருளிச்செய்வார். மங்களமான என்றால் கல்யாணம் என்று நினைக்கக்கூடாது. மங்களம் என்றால் உடனே கல்யாணம் என்று நினைக்கிறோம். (And Joseph answered Pharaoh, saying, It is not in me: God shall give Pharaoh an answer of peace)

சமாதானமானப் பதிலை, மங்களகரமானப் பதிலை, மங்களம் என்றால் சமாதானம் என்று அர்த்தம். மங்களகரம் என்றால் கடைசி வரைக்கும் சமாதானமாய் இருப்பது தான். மங்களகரமான கல்யாணம்.

அல்லேலுயா!

அதுதான் *மங்களம் செழிக்க கிருபை அருளும்.* மங்களம் செழிக்கணும் என்றால் இவர்கள் வாழ்க்கையில் கிருபை, சமாதானம் இருக்க வேண்டும். சண்டை வரக்கூடாது. சச்சரவுகள் வரக்கூடாது. அதனால் என்ன சொல்லப்படுகிறதென்றால், வியாக்கியானம் எனக்குள்ளே இல்லை. கர்த்தருக்குள்ளே இருக்கிறது.

கர்த்தர் தாமே பார்வோனுக்கு மங்களகரமான உத்தரவை, சமாதானமான உத்தரவை சமாதானமானப் பதிலைக் கொடுப்பாராக. (God shall give Pharaoh an answer of peace)

ஆமென்.

இப்பொழுது யோசேப்பைப் பாருங்கள். அந்த பானபாத்திரக்காரரின் தலைவனுக்கு யார் நினைவில் கொண்டு வந்தது? கர்த்தர் தான் நினைவில் கொண்டு வந்தது.

அல்லேலூயா!

அந்த பானபாத்திரக்காரரின் தலைவனுக்கு யார் மறக்க வைத்தது. கர்த்தர் தான் மறக்க வைத்தார். அல்லேலூயா! அதைப்போல சிலர் நம்மையும் மறந்துவிட்டிருக்கலாம், கர்த்தர் தான் அவர்களை மறக்க வைத்திருக்கிறார்.

அல்லேலூயா! இப்பொழுது அவர்களுக்கு உங்களை நினைவுக்கு வந்ததா? கர்த்தர் இப்பொழுது நினைவை தந்திருக்கிறார். எல்லாமே கர்த்தர் தான்.

அல்லேலூயா! நீங்கள் தேவனால் தெரிந்துக் கொள்ளப்பட்டவர்களாய் இருந்தால் உங்கள் வாழ்க்கையில் நடப்பது சகலமும் நன்மைக்கேதுவாய் நடக்கிறது.

அல்லேலூயா!

எல்லாவற்றையும் ஆண்டவர் மிகவும் கூர்ந்து கவனித்துக் கொண்டேயிருக்கிறார். உதாரணமாக நான் தெரிந்து கொள்ளப்பட்டவனாக இருக்கிறேன். நான் பிறந்த

நாளிலிருந்து இந்நாள் வரைக்கும் என்னை 60 வருஷத்திற்கும் மேலாக என்னை ஆண்டவர் கவனித்துக்கொண்டே இருக்கிறார்.

அல்லேலூயா!

நான் நினைத்துக் கொண்டே இருப்பேன். 'கர்த்தர் என்கூட இல்லை' என நினைப்பேன். நான், 'கர்த்தர் என்னை மறந்துவிட்டார்' என நினைப்பேன். 'கர்த்தர் நம்மைப் பற்றி நினைப்பதற்கு நாமெல்லாம் சாதாரண ஆள் தான்' என நினைப்பேன். ஆனால் கர்த்தர்:

நீ என்னால் தெரிந்து கொள்ளப்பட்டவன். உன்னை கவனித்துக்கொண்டே இருப்பேன். உன் வாழ்க்கையில் எல்லாமே நன்மைக்கேதுவாகவே நடத்துகிறேன். ஒரு வேளை உனக்கு அப்படித் தெரியலாம். நீ, 'கர்த்தர் என்னை மறந்துவிட்டார். என்னை கைவிட்டு விட்டார் என்று நினைக்கலாம்', இல்லை. நான் உன்னை கவனித்துக்கொண்டே இருக்கிறேன்.

அல்லேலூயா!

கர்த்தர் யோசேப்பை மறக்கவில்லை. ஏனென்றால் அவன் தெரிந்து கொள்ளப் பட்டவன். நீங்கள் தேவனால் தெரிந்துக் கொள்ளப்பட்டவர்களாய் இருந்தால், உங்களையும் ஆண்டவர் மறக்க மாட்டார்.

அல்லேலூயா!

அவர் வழிநடத்திக்கொண்டேயிருக்கிறார். எல்லா காரியங்களையும் சரியாக நடப்பித்துக் கொண்டே இருக்கிறார். நம்முடைய வாழ்க்கையிலே நடக்கிற ஒவ்வொரு சம்பவங்களும் கர்த்தருடைய அனுமதியின்படியே நடக்கிறது.

அல்லேலூயா! இது எல்லாமே நன்மைக்குத்தான், எல்லாமே நன்மைக்காகத் தான் முடிகிறது என்று எத்தனைபேர் விசுவாசிக்கிறோம். இப்போது பாருங்கள். பானபாத்திரக் காரரின் தலைவன் 2 வருஷம் யோசேப்பை மறக்கும் படியாய் ஆண்டவர் செய்து விட்டார். எதற்காக? நல்லதுக்காகத் தான். அவன் இப்போது தெரிந்து கொள்ளப் பட்டவனாக இருக்கிறான். எல்லாமே நன்மைக்கு தான்.

ஒரு வேளை இது அந்த பானபாத்திரக்காரரின் தலைவனுக்கு ஞாபகம் வந்தது என்றால் அவன், 'எனக்கு வியாக்கியானம் சொன்னான். மூன்று நாளில் நான் வேலையில் வந்துவிட்டேன். ஆனால் என்கூட சேர்ந்தவனை தூக்கில் போட்டு விட்டார்கள். என்னை ஆண்டவர் பாதுகாத்தாரே. எவ்வளவு பெரிய காரியம். உயிரைப் பாதுகாத்தது மட்டுமல்ல எனக்கு வேலையும் கிடைத்து, நான் பழைய நிலைக்கு வந்து சந்தோஷமாக இருக்கிறேன். அவனுக்கு நான் உதவி செய்ய வேண்டும்' என்று ராஜாவிடம் அடுத்த நாளே பேசியிருக்கலாமே.

அடுத்த நாளே, "எபிரேய புருஷனான யோசேப்பு என்று ஒருத்தர் சிறைச் சாலையிலே இருக்கிறான். ரொம்ப நல்லவன். அவனை அநியாயமாய் குற்றஞ்சாட்டி அவனை சிறைச்சாலையிலே போட்டிருக்கிறார்கள். ரொம்ப நல்லவன். அவனை நீங்கள் விடுதலையாக்க வேண்டும்" என்று சொல்லி, ராஜாவும் விடுதலையாக்கி இருந்தால் என்ன நடந்திருக்கும்? யோசித்துப் பாருங்கள். என்ன நடந்திருக்கும்?

அவன் என்ன செய்வான் என்றால் அங்கேயும் இங்கேயும் அலைவான். வேலை கிடைக்குமா? வேலை கிடைக்குமா? என்று அலைவான். ஒவ்வொரு கம்பெனியாக ஏறி இறங்குவான். ஒவ்வொரு எஜமானிடமும் போய், "உங்களுக்கு நான் வேலை செய்யட்டுமா?" என்று கேட்பான். இளையக்குமாரன் பன்றி மேய்க்கிற வேலைக்கு போனான் அல்லவா? வேலைக்கிடைக்காமல், அதேபோல இவனும் வேலைக்காக ஒவ்வொரு கம்பெனியாய், ஒவ்வொரு தோட்டக்காரனிடமாக போய், "எனக்கு ஏதாவது வேலை கொடுங்கள்" என்று, தன் வயிற்றுப்பிழைப்புக்காக அவன் வேலை தேடி அலைந்திருப்பான்.

அப்படி விடுதலை ஆக்கப்பட்ட அவனுக்கு வேலை எளிதாக கிடைக்குமா? வேலை எளிதாக கிடைக்காது. வேறு யாருக்கு கிடைத்தாலும், அவனுக்கு கிடைக்காது. ஏன் கிடைக்காது? அவன் மேல் பலாத்கார குற்றம்சுமத்தப்பட்டிருக்கிறது. பலாத்காரக் குற்றம் அவன் மேல் இருக்கிறது. அவன் குற்றம் சுமத்தப்பட்டவன். நீதிமன்றம் அவன் மேல குற்றவாளி என்று தீர்ப்புக் கூறப்பட்டிருக்கிறது. சிறைச்சாலையிலே இருந்து இருக்கிறான். பலாத்கார குற்றம்சுமத்தப்பட்டிருக்கும்போது எப்படி யார் வேலைக் கொடுப்பார்கள். ஒருவரும் வேலைக் கொடுக்க மாட்டார்கள். ஒரு குற்றவாளிக்கு வேலை கிடைக்காது. நம்ப மாட்டார்கள. ஜனங்கள் அவனை வீட்டில் சேர்த்து வைக்க மாட்டார்கள். சாப்பாடு கொடுக்க மாட்டார்கள். யாரும் வேலை கொடுக்க மாட்டார்கள். அவன் மேல் அப்படி ஒரு முத்திரை இருக்கிறது. அப்படி என்னும்போது யார் வேலை கொடுப்பார்கள், வேலையும் அவனுக்கு கிடைக்காது. அதனால் பானபாத்திரக்காரன் மறந்ததும் நல்லதா நல்லதில்லையா? நல்லது.

அல்லேலூயா!

ஆண்டவர் அதைக் கவனித்துக் கொண்டே இருந்தார். ஆம், யோசேப்பு, ‘இவன் மறந்து விட்டானே. நமக்கு துரோகம் பண்ணி விட்டானே, நன்றி கெட்டவன்’ என்று ஒரு வேளை நினைத்திருக்கலாம். அதை மனுஷனுக்கு என்று செய்யவில்லை. கர்த்தருக்கு என்று தான் செய்தான். ஆனால், கர்த்தர் மறக்கவில்லை.

அல்லேலூயா!

அந்த நேரத்தில் பானபாத்திரக்காரனுக்கு யோசேப்பைக் குறித்து ஞாபகம் வந்திருந்தால், அவனுடைய வாழ்க்கை மிகவும் சீரழிந்துப் போயிருக்கும். யாரும் வேலை கொடுக்க மாட்டார்கள். ஏனெனில், அவன் குற்றவாளி. மறந்தது நல்லது தான். இப்பொழுது ஆண்டவர் பார்வோனுக்கு சொப்பனத்தை கொண்டு வந்து இவனுக்கு ஞாபகத்தை ஏற்படுத்தும் பொழுது சகலமும் நன்மைகேதுவாய் நடக்கிறது.

அல்லேலூயா!

ஆண்டவர் எப்பொழுதுமே சரியான நேரத்திலே கிருயை செய்வார். அப்படி மறந்தாலும், கர்த்தர் பார்வோனுக்கு சொப்பனத்தைக் கொடுக்கும் பொழுது, இப்பொழுது பானபாத்திரக்காரனுக்கு ஞாபகம் வருகிறது. ராஜா என்ன செய்தாரென்றால் இரண்டாவது ஸ்தானத்திலே உயர்த்துகிறார்.

அல்லேலூயா!

“தேவ ஆவியைப் பெற்ற உன்னைப் போல யார் உண்டு. மோதிரத்தைக் கழற்றி அவனுக்குப் போட்டு இனிமேல் அரசாணைகளை நீ தான் கொடுக்கணும். G.O நீ தான் pass பண்ணணும். எல்லா சட்டங்களும் உன்னுடைய கையில் தான் இருக்கிறது. மோதிரத்தைக் கழற்றிக் கொடுத்தது, மாத்திரம் அல்ல. நீ என் அரண்மணைக்கு அதிகாரியாய் இருப்பாய். இந்த எகிப்து தேசம் முழுவதற்கும் நீ தான் அதிகாரி. சிங்காசனத்தில் மாத்திரம் உன்னிலும் நான் பெரியவனாய் இருப்பேன். இனி எல்லாமே, எகிப்து தேசமே உன் கையில் தான் இருக்கிறது. உன்னுடைய உத்தரவு இல்லாமல் ஒருவனாலும் காலை கையைக் கூட நீட்ட முடியாது. அவ்வளவு மிகுந்த அதிகாரம் உனக்குக் கொடுக்கப்படும்.”

அல்லேலூயா! மிகுந்த உயர்ந்த பதவி கிடைத்தது.

அல்லேலூயா! போத்திபாரின் மனைவியும் இப்போது பயப்படுவாள். ‘அவன் மேல் நாம் அநியாயமாய் குற்றம் சாட்டினோமே’ என்று. போத்திபாரும் இப்பொழுது பயப்பட வேண்டும். எல்லோருமே பயப்பட வேண்டும். 17 வயதில் அவனை விற்றுப் போட்டார்கள். 30 வயதில் பார்வோனுக்கு முன்னால் நிற்கிறான். அவன் குற்றஞ்சாட்டப்பட்டான். 13 வருடத்திற்குப் பிறகு அவன் அந்த உயர்வுக்கு வரும் பொழுது, அவன் இருந்த சிறைச்சாலை கூட இப்போது இவன் அதிகாரத்தில் இருக்கிறது. ஒரு

நாளில் இவனை விலங்குப் போட்டுக் கொண்டு போனார்கள். இப்பொழுது யாரையும் இவன் விலங்குப் போட்டு இவன் உள்ளே சிறைச்சாலைக்கு அனுப்பலாம். அந்த அளவுக்கு அவனுக்கு அதிகாரம் இருந்தது.

அவன் இரண்டாம் ரதத்தில் போனான். அல்லேலூயா! இன்றைக்கு நாம் இரண்டாம் ரதத்திலே பிரயாணம் செய்கிறோம்.

அல்லேலூயா!

வார்த்தையானது முதலாம் ரதத்தில் தீர்க்கதரிசி மூலமாய் உலகமெங்கும் போனது. இப்போது நாம் இரண்டாம் ரதத்தில், இரண்டாவது முறையாக மணவாட்டி மூலமாக செய்தி உலகமெங்கிலும் போகிறது.

அல்லேலூயா! இரண்டாம் ரதத்தில் ஏற்றி தெண்டனிட்டு பணியுங்கள் என்று அவனுக்கு முன்பாகக் கூறுவித்தான். பார்வோனும் யோசேப்பும் வருகிறார்களென்றால், ரோட்டில் இருப்பவர்கள் எல்லாம் கீழே விழுந்து விட வேண்டும். அந்த மாதிரியான உயர்வு அவனுக்கு வந்தது.

அல்லேலூயா!

அதே போலத்தான் நீங்கள் தெரிந்து கொள்ளப்பட்டவர்களாக இருந்தீர்களென்றால், கர்த்தர் உங்கள் வாழ்க்கையிலும் அசைவாடிக் கொண்டிருக்கிறார். எப்போழுதும் கிருயை செய்துக் கொண்டிருக்கிறார். தினமும் கிருயை செய்து கொண்டிருக்கிறார். நான் சும்மா மிகைப்படுத்தி சொல்லவில்லை. உண்மையைத் தான் சொல்கிறேன். நாம் சிலநேரம் அதை விசுவாசிக்காமல் இருக்கிறோம். நாம் விசுவாசித்தால் மேன்மை அடைகிறோம். நான் தேவனால் தெரிந்துக் கொள்ளப்பட்டவன். சகலமும் நன்மைக்கேதுவாய் நடக்கிறது.

அல்லேலூயா!

யாராவது எனக்கு தீமை செய்ய வேண்டும் என்று நினைத்தாலும் அதுவும் நன்மைக்கு தான். கர்த்தர் அப்படி வைத்திருக்கிறார். என்னுடைய குணாதிசயத்தை (character) பரிபூரணப்படுத்துவதற்காக ஆண்டவர் எனக்கு சில விரோதிகளை வைத்திருக்கலாம். பக்கத்திலேயே வைத்திருக்கலாம். எனக்கு பொறுமை வர வேண்டும். நான் இந்த தெய்வீக சுபாவத்தை அடைவதற்காக ஆண்டவர் சில விரோதிகளை வைத்திருக்கலாம். நான் இதை எப்படி எதிர்கொள்கிறேன் என்று பார்க்கிறார். நாம் அநியாயமாகக் குற்றம் சாட்டப்படலாம். பலர் பல கருத்துக்களை நம்மேல் சொல்லலாம். இதோ பலவிதமாக அவமதிக்கப்படலாம். பரவாயில்லை. இதெல்லாம் நம்முடைய சுபாவத்தை (character) பூரணப்படுத்துகிறது.

அல்லேலூயா!

சகலமும் நன்மைக்கே! எத்தனை பேர் விசுவாசிக்கிறோம். பாருங்கள், பான பாத்திரக்காரன் மட்டும் முதலிலேயே அவனை நினைத்திருந்தால், வேலை தேடி, வேலை தேடி அலையணும். வேலை இல்லாமல் சாப்பாட்டுக்கு வழி இல்லாமல் இருக்கணும். ஒருவரும் வேலை தர மாட்டான். அவன் முகத்திலே அடித்த மாதிரி பேசுவார்கள். "உனக்கு யார் வேலை தருவார்கள்? நீ சிறைச்சாலையிலிருந்து வந்திருக்கிறாய் என்று உன்னைப் பற்றி தெரியாது என்று நினைத்தாயா?" அந்த மாதிரி அவமானப்படலாம். இப்போதோ அவன் உயர்த்தப்பட்டு எல்லாருமே அவனுக்கு பயப்படுகிறார்கள்.

அல்லேலூயா! கர்த்தர் நினைக்கிறார்.

அல்லேலூயா! எத்தனை பேர் விசுவாசிக்கிறோம். யோசேப்பு வாழ்க்கையிலே அவ்வாறு செய்தார் என்றால் (அது ஒரு மாதிரி) நம்முடைய வாழ்க்கையிலேயும் இயேசு கிறிஸ்து செய்யமுடியும். எத்தனை பேர் விசுவாசிக்கிறோம்.

## யோசேப்பு இரண்டாவது முறை மறக்கப்படுதல்

யோசேப்பு ஒரு முறை மறக்கப்பட்டது மட்டுமல்ல. அவன் இரண்டாம் முறையும் மறக்கப்படடான். யாத்திராகமம் 1ம் அதிகாரம் 8ம் வசனத்தை வாசிக்கலாம்.

**"யோசேப்பை அறியாத புதிய ராஜன் ஒருவன் எகிப்தில் தோன்றினான்."** "Now there arose up a new king over Egypt, which knew not Joseph."
எகிப்து யோசேப்பை மறந்து போனது.

நம் நாட்டுக்கு காந்தி பாடுபட்டு அவர் சுதந்திரம் வாங்கிக் கொடுத்தார். அஹிம்சை கொள்கை மூலமாக போராடி இரத்தம் சிந்தாமல் போராடி யுத்தம் செய்யாதபடி அஹிம்சை கொள்கையினால் நம் நாட்டுக்கு சுதந்திரம் வாங்கி கொடுத்தார். நாம் அதை நம்புகிறோம். அதனால் தான் ரூபாய் நோட்டில் எல்லாம் காந்திப் படத்தை போட்டு வைத்திருக்கிறார்கள்.

ஏன்? காந்திப்படத்தைப் போட்டு அரசாங்கம் வைத்திருக்கிறார்களென்றால் சுதந்திரம் வாங்கி தந்து 60 வருஷம் 70 வருஷம் ஆகப்போகிறது. அதனால் நம் ஜனங்கள் மறந்து விடுவார்கள். யார் நம் நாட்டுக்கு சுதந்திரம் வாங்கி தந்தார்கள். வெள்ளையர்களுடைய கையிலிருந்து நம்மை விடுதலையாக்கினார். 200 வருஷம் வெள்ளைக்காரர்கள் நம்மை ஆண்டார்கள். நமக்கு சுதந்திரம் கிடைத்து, ஜனநாயக நாடாக மாறியது. அந்த காந்தி என்கிறவர் பாடுபட்டதனால் அவரை தேசப்பிதா, மகாத்மா என்று சொல்லி அவரை நாம் கௌரவிக்கிறோம். அரசாங்கம் கௌரவித்து ரூபாய் நோட்டுகளில் எல்லாம் காந்தி படம் தான். இப்போது அதற்கு விரோதமாக பேசுகிறவர்களும் வந்திருக்கிறார்கள். அதெல்லாம் நல்லது கிடையாது.

காந்தி நம் நாட்டுக்கு சுதந்திரம் வாங்கித் தந்தார். நாம் அதை வந்து கனப்படுத்தித் தான் ஆக வேண்டும். நாம் இந்திய நாட்டில் வாழ்கிறோம். நமக்கு நாட்டுப்பற்று அவசியம். அதற்காக நாம் ஜெபிக்க வேண்டும். நாட்டுப் பற்று அவசியம். நாட்டுக்காக பாடுபட்டவர்களை நாம் கௌரவிக்கிறதில் தவறு இல்லை. ஆனால் என்ன செய்ய வேண்டும்? கும்பிடுகிறதல்ல. ஆனால் என்ன செய்ய வேண்டும்? அவர்கள் செய்த கிருயைகளை நினைத்துப் பார்க்க வேண்டும்.

ஆனால் இப்பொழுது அதே போல் தான் யோசேப்பு எகிப்து தேசத்துக்கு பிதா மாதிரி. எகிப்து தேசத்தை காப்பாற்றியதே அவன் தான். பஞ்சம் வந்து எல்லாமே அழிந்து போக வேண்டியது தான். எகிப்து தேசத்தில் எல்லாமே அழிந்து போக வேண்டிய நேரத்திலே அந்த ஜனங்களை அவன் தான் பாதுகாத்தான். 7 வருஷம் பஞ்சம். அந்த பஞ்சத்தில் பாதுகாத்ததினால் அவனை அரசாங்கம் மிகவும் கௌரவித்தது. இப்போது யோசேப்பை அறியாத ஒரு ராஜன் தோன்றினான். ஒருவேளை யோசேப்பைப் பற்றி அவன் தெரிந்திருந்தாலும் கூட, 'அவனை காட்சியை விட்டு எடுக்க வேண்டும். யாருமே யோசேப்பை பாராட்டக்கூடாது. இந்த யோசேப்பு ஒரு எபிரேயன். அவன் எகிப்தியன் கிடையாது. வேற ஒரு ஜாதியை சேர்ந்தவன். அதனால் அந்த முக்கித்துவத்தை எடுத்துவிட வேண்டும்' என்று அவன் செயல்பட்டிருக்கலாம்.

யோசேப்பு என்ன சொல்கிறான். 45ம் அதிகாரம் 5ம் வசனத்திலே வாசிக்கிறோம்.

**"என்னை இவ்விடத்தில் வரும்படி விற்றுப்போட்டதினால், நீங்கள் சஞ்சலப்பட வேண்டாம்; அது உங்களுக்கு விசனமாயிருக்கவும் வேண்டாம்; ஜீவ ரட்சணை செய்யும் படிக்குத் தேவன் என்னை உங்களுக்கு முன்னே அனுப்பினார்."**

இதோ ஜீவ ரட்சணை செய்யும் படியாக. அந்த யோசேப்பின் குடும்பத்தாரை காப்பாற்றுவதற்காக மட்டுமல்ல, எகிப்து தேசத்தையே காப்பாற்றுவதற்கு தான்.

அல்லேலுயா! எகிப்து தேசத்தை மட்டுமல்ல. உலகத்தையே காப்பாற்றுவற்கு தான். சுற்றியிருக்கிற நாட்டில் எல்லாம் பஞ்சம் தான். எல்லா நாட்டிலுள்ளவர்களுக்கும் இவன் தான் தானியம் கொடுக்கிறான். உலக ரட்சகர் போல உலகத்தையே காப்பாற்றுவதற்கு தான்.

எல்லாமே கர்த்தருடைய சிருஷ்டிப்பு தான். உலகத்திலேயிருக்கிற எந்த ஜாதியை சேர்ந்தவர்களாயிருந்தாலும், எந்த மதத்தை சேர்ந்தவர்களாயிருந்தாலும் அவர்கள் தேவனுடைய சிருஷ்டிப்புதான். தேவன் தான் பிழைப்பூட்டி கொண்டிருக்கிறார். ஆனால் அவர்கள் தெரிந்து கொள்ளப்பட்டவர்களாக இல்லை. ஆனால் கர்த்தருடைய சிருஷ்டிப்புகளை, அவர் பாதுகாக்கிறார். எல்லா ஜனங்களும் எகிப்தியராக இருந்தாலும், வேறு யாராக இருந்தாலும், அவர்கள் தேவனுடைய பிள்ளையாக இல்லாவிட்டாலும், அவர்கள் தேவனால் உண்டாக்கப்பட்டவர்கள், எல்லோரையும் ஆண்டவர் பாதுகாக்கிறார். யாரைக் கொண்டு பாதுகாத்தார். இந்த யோசேப்பைக் கொண்டு தான்.

அல்லேலூயா! அவர் கொடுத்த வெளிப்பாடு.

அல்லேலூயா! **மணவாட்டியின் நிமித்தமாகத்தான் உலகமே அழியாமல் இருக்கிறது. மணவாட்டி மேலே போய்விட்டாள் என்றால் உலகமே அழிந்து போகும். நம்மை வைத்து தான் ஆண்டவர் உலகத்தையே பாதுகாத்து வைத்திருக்கிறார். எல்லா சிருஷ்டிகளையும் பாதுகாத்து வைத்திருக்கிறார். இந்த இரகசியம் யாருக்காவது தெரியுமா? வேதாகமம் அதைக் கூறுகிறது.**

அல்லேலூயா!

உலகத்தை அழிப்பதற்கு முன்னதாக மணவாட்டியை மேலே கொண்டு போய் உலகத்தை அழிக்கப் போகிறார். யுத்தத்தில் உலகம் அழிந்து போக போகிறது. இன்னும் ஏன் அழியாமல் இருக்கிறது? அவருடைய மணவாட்டி இங்கு இருக்கிறாள்.

அல்லேலூயா!

அதே போல் யோசேப்பின் நிமித்தமாக தான் ஆண்டவர் எல்லோரையுமே பாதுகாத்தார். ஜீவரட்சணை செய்வதற்காக. அவன் அதை கர்த்தருக்காக செய்தான்.

அல்லேலூயா!

மனுஷனுக்காக அல்ல. கர்த்தருக்காக அதை செய்தான். "நீங்கள் என்ன செய்ய வேண்டும் என்றால் பண்டக சாலைகளை ஏற்படுத்தி எல்லா தானியங்களையும் சேர்த்து வைத்தால், பஞ்ச காலத்தில் நமக்கு பஞ்சமே இருக்காது. உயிர்களை காப்பாற்றலாம். ஜனங்களை காப்பாற்றலாம்" என்று சொன்னபோது அவனுடைய ஆலோசனை, அவனுடைய வெளிப்பாடு, அவனுடைய அர்த்தம் உரைத்தலானது எத்தனையோ லட்சக்கணக்கான மக்களை பாதுகாத்தது.

அல்லேலுயா!

ஆனால் இந்த ராஜன் அந்த விஷயத்தை மறந்து விட்டான். யோசேப்பு செய்த நன்மையை மறந்துவிட்டான். அதனால் யோசேப்பு மறுபடியுமாக மறக்கப்பட்டான். இரண்டாம் முறை மறக்கப்பட்டான். இதோ அவனுடைய சகோதரர்கள் வந்தார்கள். அவனுடைய சகோதரர்கள் அவனுடைய குடும்பத்தார் எல்லோரும் வந்தார்கள். வந்த அவர்களை என்ன செய்தான்? கோசேன் என்ற நாட்டிலே அவர்களை குடியமர்த்தினான். எகிப்து தேசத்தினுடைய கொழுமையை அவர்களுக்குக் கொடுத்தான். எகிப்து தேசத்தின் முதல் தரமான உணவுகள் எல்லாவற்றையும் அவர்களுக்குக் கொடுத்து, அவர்கள் நன்றாகச் சாப்பிட்டு சந்தோஷமாக இருந்தார்கள்.

18ம் வசனத்தை வாசிக்கலாம்: **"உங்கள் தகப்பனையும் உங்கள் குடும்பத்தாரையும் கூட்டிக்கொண்டு, என்னிடத்தில் வாருங்கள், நான் உங்களுக்கு எகிப்து தேசத்தின் நன்மையைத் தருவேன்; தேசத்தின் கொழுமையைச் சாப்பிடுவீர்கள்."** உங்களுக்கு முதல்தரமான உணவுகள் தருவேன். மளிகை சாமான் முதற்கொண்டு உங்களுக்கு எகிப்து தேசத்தின் கொழுமையை உங்களுக்கு தருவேன். அவர்கள் நல்ல கோசேன் நாட்டில் இருந்தார்கள். இப்பொழுது பலுகிப்பெருகி நிரப்பி விட்டார்கள். பெரிய ஜாதியாக மாறிவிட்டார்கள். நல்ல சாப்பாடு. நல்ல செழிப்பு.

அல்லேலூயா!

ஆனால் இந்த புதிய ராஜா வரும்போது அதை மறந்து விட்டான்.

யோசேப்பின் குடும்பம் தான் இவர்கள். இவர்களால் தான் நமக்கு ரட்சிப்பு வந்தது. அல்லது எல்லாமே அழிந்து போய் இருக்குமே, செத்துக் போயிருக்குமே என்று நினைக்கவேயில்லை. புதிய இராஜா யோசேப்பை மறந்து விட்டான். இவர்கள் இப்போது இராஜ போஜனத்தைப் புசித்து அதிக ஜனத்தொகை கொண்ட ஜனங்களாக ஆகி விட்டார்கள். நிறைய குழந்தைகளை பெற்று விட்டார்கள். பலுகி பெருகி விட்டார்கள். பிள்ளைகள் எல்லாம் நல்ல பலமுள்ளவர்களாக இருக்கிறார்கள். ஏனென்றால் நல்ல சாப்பாடு. அவ்விதமாய் இருக்கும்போது அவர்களுக்கு எந்தக் குறையும் இல்லை. நல்ல சுதந்திரம், எல்லாமே இருந்தது. அவர்களுக்கு மரியாதையும் இருந்தது. ஏனென்றால் யோசேப்பின் சந்ததி இவர்கள். யோசேப்பு பெரிய ஞானி, தேசப்பிதா. அப்படியிருக்கும் போது, எகிப்தில் புதிய ராஜன் வருகிறான்.

இப்பொழுது நமக்கு புதிய அரசாங்கம் (new government) வந்திருக்கிறது. தலைநகர் டெல்லியில் புதிய அரசாங்கம் வந்திருக்கிறது. இவ்வளவு நாளும் காங்கிரஸ் ஆட்சி செய்தது. புதிய அரசாங்கம் வந்த பிறகு மதக்கலவரங்கள் எல்லாம் கொஞ்சம் கொஞ்சமாக வந்துக்கொண்டிருக்கிறது. இன்னும் போகப்போக எப்படியெல்லாம் சம்பவிக்கப்போகிறது என்று தெரியப்போகிறது. எல்லாம் தீமையாக இருக்கலாம். ஆனால் எல்லாமே நன்மைக்கேதுவாய் நடக்கிறது. எத்தனைபேர் விசுவாசிக்கிறோம். அதுவும் நன்மைக்கு தான், தெரிந்து கொளள்ப்பட்டவர்களுக்கு எல்லாமே நன்மைக்கு தான் நடக்கிறது.

இப்பொழுது என்ன செய்தார்கள். அடிமைத்தனத்திலிருந்து கர்த்தரை நோக்கி முறையிடுகிறார்கள். யாத்திராகமம் 2ம் அதிகாரம் 23ம் வசனம்:

**"சிலகாலம் சென்றபின், எகிப்தின் ராஜா மரித்தான். இஸ்ரவேல் புத்திரர் அடிமைத்தனத்தினால் தவித்து, முறையிட்டுக் கொண்டிருந்தார்கள. அவர்கள் அடிமைத் தனத்திலிருந்து முறையிடும் சத்தம் தேவ சந்நிதியில் எட்டினது."**

அங்கே நல்ல கொழுமையானவைகளைச் சாப்பிட்டார்கள். பிள்ளைகள் நன்றாக விருத்தியடைந்தார்கள். நிறைய குழந்தைகள், ஒவ்வொருவருக்கும் பத்துக்கு மேலே குழந்தைகள் பெற்று இருப்பார்கள். ஆகவே நிறைய குழந்தைகளைப் பெற்று ஜனத்தொகை நிறையவே பெருகிப போயிற்று. மக்கள் தொகை பெருகி விட்டது. எல்லாரும் ஆரோக்கிமுள்ளவர்களாகவும், பலமுள்ளவர்களாகவும் இருக்கிறார்கள். எபிரேய ஸ்திரீகள், பலமுள்ள ஸ்திரீகள் என்று வேதாகமத்தில் எழுதப்பட்டுள்ளது. பலத்த ஜாதியாக இருந்தது. இந்த மாதிரி இருக்கும் போது பார்வோன் உபாய தந்திரம் பண்ணி அவர்களை அடிமைத் தனத்திற்கு கொண்டு வந்தான். அவர்கள் கர்த்தரை நோக்கி முறையிட்டார்கள். ஆண்டவர் அவர்களை மறந்துவிட்டது போல தெரிந்தது.

அல்லேலூயா!

ஆனால் இயேசு கிறிஸ்து அவர்களை மறக்க மாட்டார். எத்தனை பேர் விசுவாசிக்கிறோம். அந்த ராஜா மறந்திருக்கலாம். ஆனால் கர்த்தர் மறக்கவில்லை.

அல்லேலூயா! அல்லேலூயா!

எத்தனைபேர் விசுவாசிக்கிறோம். அவர் மறக்கவில்லை. ஆனால் மறந்தது போல தெரிகிறது. அவர் கைவிட்டது போல தெரிகிறது. ஆனால் கர்த்தர் அவர்களை ஒருபோதும் மறக்க மாட்டார். காரணம் தெரிந்து கொள்ளப்பட்டவர்களை கவனித்துக் கொண்டே இருக்கிறார். அதை மட்டும் நீங்கள் அறிந்தீர்களென்றால்!

யோசேப்பை அறியாதவன். அந்த பார்வோன் "கர்த்தர் யார்? நான் அவரை அறியேன்" என்று சொல்கிறான். 5ம் அதிகாரம் 2ம் வசனத்தை வாசிக்கலாம்:

**“அதற்குப் பார்வோன்: நான் இஸ்ரவேலைப் போகவிடக் கர்த்தரின் வார்த்தையைக் கேட்கிறதற்கு அவர் யார்? நான் கர்த்தரை அறியேன்; நான் இஸ்ரவேலைப் போகவிடுவதில்லை என்றான்.”**

‘இஸ்ரவேலின் ஜனங்களைக் கர்த்தர் போகச் சொன்னார் என்பதற்கு அவர் யார்? அவர் வார்த்தையை கேட்பதற்கு நான் யார்? அவரை நான் அறியேன். எனக்குத் தெரியாது.’ அவன் கர்த்தரையும் அறியவில்லை. யோசேப்பையும் அறியாத ராஜா. எப்படிப்பட்ட ராஜா பாருங்கள். இஸ்ரவேலர் அடிமைத்தனத்தில் இருந்த காரணத்தால், அவர்கள் கர்த்தரை நோக்கி முறையிட்டார்கள். கொஞ்ச நாளைக்கு முன்னால் எப்படியிருந்தார்கள்? மிகவும் செழிப்பாக, சந்தோஷமாக. இப்போது எப்படி இருக்கி றார்கள். முறையிடுகிறார்கள். கர்த்தரை நோக்கி முறையிடுகிறார்கள். வாழ்க்கையிலே தாழ்வு வந்து விடுகிறது. உயர்விலிருந்து தாழ்வு வந்து விட்டது. செழிப்பிலிருந்து வறுமை. மிகவும் சுதந்திரமாக இருந்தவர்கள் இப்பொழுது அடிமைத்தனத்திலே இருக்கிறார்கள். எகிப்திலே இருக்கிறார்கள். காரணம் என்னவென்றால் அந்த ராஜா மறந்து விட்டான். யோசேப்பை மறந்து விட்டான் என்று சொல்லப்படுகிறது. கர்த்தரை மறந்து விட்டான். யோசேப்பையும் மறந்துவிட்டான். அதனால் இஸ்ரவேல் ஜனங்கள் கர்த்தரை நோக்கி முறையிட வேண்டியதாய் வந்தது. இப்பொழுது கர்த்தர் நினைவு கூறுகிறார்.

அல்லேலூயா! எத்தனைபேர் விசுவாசிக்கிறோம்.

பைபிள் வசனம் அப்படி சொல்கிறது. கர்த்தர் அவர்களை நினைவு கூர்ந்தார். யாத்திராகமம் 2-ம் அதிகாரம் 25ம் வசனத்தை வாசிக்கலாம்: **“தேவன் இஸ்ரவேல் புத்திரரைக் கண்ணோக்கினார்; தேவன் அவர்களை நினைத்தருளினார்.”** தேவன் அவர்களை நினைத்தருளினார்.

அல்லேலூயா! கர்த்தர் மட்டும் ஒரு பார்வை பார்த்துவிட்டால் முடிந்து போயிற்று. எல்லாம் முடிந்து போயிற்று. அவர் தம்முடைய முகத்தை, நம்மேல் பிரகாசிக்க வைக்கிறார். ஜீவியம் உடனே மாறிவிடும்.

அல்லேலூயா!

அன்னாளை கண்ணோக்கி பார்த்தார். உடனே சாமுவேல் வந்து விட்டான். பார்த்தால் முடிந்து போச்சு. இப்பொழுது கொஞ்சம் முகத்தை திருப்பினது மாதிரி இருந்தார். இப்போது அவர்களை நினைத்தருளினார். யோசேப்பையும் மறந்துவிட்டார்கள். புதிய ராஜன் மறந்துவிட்டான். கர்த்தரை அறியேன் என்று சொல்கிறார். “யோசேப்பு யார்? அவனா எங்கள் நாட்டை காப்பாற்றினான். அவன் யார்? அவன் வேற ஜாதிக்காரன். எகிப்தியன் கிடையாது. எபிரேயன் அவன். அவர்கள் எல்லாம் தேவையில்லை. தூக்கி தூரப்போடு. கர்த்தர் யார்? கர்த்தர், கர்த்தர் என்கிறீர்களே, கர்த்தர் யார்? எனக்கு அதெல்லாம் தெரியாது. எனக்கு அரசாங்க அதிகாரம் இருக்கிறது. நான் என்ன வேண்டுமானாலும் செய்யமுடியும்.” அந்த மாதிரியான அவ்வளவு பொல்லாத ராஜா. அவ்விதமாய் இருக்கும்போது கர்த்தரை நோக்கி அவர்கள் கூப்பிடுகிறார்கள்.

அல்லேலூயா!

இப்போது அவர்களின் பெருமூச்சை கேட்டார். கர்த்தர் அவர்களை நினைத் தருளினார். அல்லேலூயா! மனுஷன் வீராப்பு பேசலாம். பல காரியங்களை நமக்கு விரோதமாய் செய்யலாம். அவன் தனனுடைய அதிகாரத்தினால் அப்படி செய்யலாம். ஆனால் கர்த்தர் பார்த்துக் கொண்டே இருக்கிறார். அல்லேலூயா! கர்த்தர் நம்மை நினைத்தருளுகிறார்.

அல்லேலூயா!

மனுஷனுடைய வீராப்பு எல்லாம் தணிஞ்சு போகும். அவனுடைய சவால் எல்லாம் தணிஞ்சு போகும். கர்த்தரால் தெரிந்துக் கொள்ளப்பட்டவர்கள் நாம். அவர் எப்போதும் நம் மேல் கண் வைத்திருக்கிறார். எத்தனை பேர் விசுவாசிக்கிறோம். சரி இப்போது இதோ

தேவன் நினைத்ததினால் அவர்களுக்கு விடுதலைக் கிடைத்தது என்று நமக்கு தெரிந்து இருக்கிறது.

ஒரு வேளை அந்த ராஜாவும் அவர்களை மறக்காதபடி, யோசேப்பை மறக்காதபடி இவர்களுக்கு எல்லா சலுகையையும் கொடுத்து இவர்களுக்கு முழு சுதந்திரம் கொடுத்து, எகிப்திலே இவர்களை நல்ல மாதிரி நடத்தினால் அந்த ராஜா நடத்தினது போல இந்த புதிய ராஜாவும் நடத்தினால் என்ன ஆகும்? அந்த மனுஷன் மறக்கவில்லையென்றால் என்ன ஆகியிருப்பார்களென்றால், கானான் தேசத்தையே மறந்து விடுவார்கள்.

அல்லேலூயா!

கானான் தேசத்துக்கு போக வேண்டும் என்ற நினைப்பே அவர்களுக்கு இருக்காது. எகிப்தே அவர்களுக்கு கானான் ஆக இருக்கும். அதே போல மனுஷர்கள் இன்றைக்கு பொல்லாதவர்களாக மாறிக் கொண்டேயிருக்கிறார்கள். உலகத்திலே பாவம் பெருகி கொண்டேயிருக்கிறது. எல்லாமே எதிராக இருக்கிறது. ஆபத்துக்கள் அதிகம் இருக்கிறது. பிளேக் வியாதிகள், கொள்ளை நோய்கள், பயங்கரவாதங்கள், கொலை, எங்கே பார்த்தாலும் அரசியல் வீழ்ச்சி, எல்லாம் வீழ்ச்சி அடைந்திருக்கிறது. பொருளாதாரம் வீழ்ச்சியடைந்திருக்கிறது. உலகமே பயங்கரவாதத்தால் நிறைந்துள்ளது. உலகமே அதிக பாவத்தால் நிறைந்துள்ளது. அவர்கள் தங்கள் ஆத்துமாவையும் தங்களுடைய மாமிசத்தையும் சீரழித்துக் கொண்டிருக்கும் போது, இதெல்லாம் நடக்கும் போது, இதோ இது எல்லாம் இல்லாமல், உலகம் நல்ல மாதிரி இயங்கியது என்றால், நாம் என்ன செய்வோம். பரலோக ராஜ்ஜியம் போக வேண்டும் என்ற எண்ணமே வராது. உலகமே நமக்கு பரலோக ராஜ்ஜியமாகி விடும். அதனால், இதெல்லாம் நடக்கிறதை நாம் எப்படி சொல்வது? எல்லாம் நன்மைக்கே! எத்தனை பேர் விசுவாசிக்கிறோம். நமக்கு எடுத்துக்கொள்ளப்படுதலைக் (rapture) குறித்த எண்ணம் வருகிறது. ஆமென்.

ஏன்? நாம் மறக்கப்படுவோம் என்றால் அதுவும் நம்முடைய நல்லதுக்குத்தான்.

அல்லேலூயா!

நமக்கு உதவி செய்கிற எல்லாவற்றுக்குமே நாம் கர்த்தருக்கு நன்றி செலுத்த வேண்டும். பார்வோன் மட்டும் யோசேப்பை நினைத்திருந்து, அவர்களுக்கு தயவு காட்டியிருந்தால், பரலோக ராஜ்ஜியத்திற்கு, அவர்கள் கானான் தேசத்திற்கு போயிருக்க மாட்டார்கள். அவர்களுடைய அந்த சொந்த தேசத்திற்குத் திரும்பிபோயிருக்க மாட்டார்கள்.

ஹிட்லர், முசோலினி, எய்க்மேன் (Eichmann) மூலமாக உபத்திரவங்கள் வந்தது. படுகொலை செய்யப்பட்டார்கள். அதனால் தான் அவர்கள் சொந்த தேசத்திற்கு இப்போது போய் சேர்ந்திருக்கிறார்கள். ஒரு லட்சத்து நாற்பத்து நான்காயிரம் பேர் வந்து முத்திரை போடப்படுவதற்காக காத்திருக்கிறார்கள். நீங்கள் மேலே போகாமல் (rapture) அவர் களுக்கு மீட்பு வராது. இப்போது அவர்கள் சொந்த தேசத்துக்கு வந்திருக்கிறார்கள். காரணம் என்ன?

அதே போல் எகிப்திலேயே நல்ல மாதிரி இருந்தார்களென்றால், பரலோக ராஜ்ஜியம் என்ற நினைப்பே வந்திருக்காது. இதே போல உங்களுக்கு நல்ல பணவசதி எல்லாமே இருந்து சகலமும் நன்றாக, நன்றாக இருந்தது என்றால் பரலோக ராஜ்ஜியம் என்ற எண்ணமே வராது.

அல்லேலூயா!

எல்லாம் ஆண்டவர் நமக்கு தந்தால்கூட நம்மை சுற்றி உபத்திரவம் இருக்கிறது.

அல்லேலூயா! சுற்றிப் பாவம் இருக்கிறது. பாதுகாப்பு இல்லை. நாளைக்கு என்ன நடக்கும் என்று நமக்குத் தெரியாது. இதனால் நாம் இயேசுவையே நினைக்கிறோம்.

அல்லேலூயா! ஆமென். இயேசுவே வாரும் என்று அழைக்கிறோம்.

ஆமென்.

அந்த ராஜா மட்டும் நினைத்திருந்தானென்றால், அவர்கள் கோசேனில் மிகவும் சந்தோஷமாக இருப்பார்கள். ஆடம்பர வாழ்க்கை வாழ்வார்கள். கர்த்தர் உங்களை ஆசீர்வதிக்கும் போது, எல்லோரும் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். நீங்கள் ஆடம்பரத்தில் இருக்கும் போது, மற்றவர்களை இழிவுப்படுத்தினாலோ, மிகவும் எடுத்தெறிஞ்சி பேசுவதாலோ, கொஞ்ச நாளையிலே தாழ்த்தப்பட்டு விடுவீர்கள். பண வசதி எல்லாம் குறைந்து விடும். எல்லாமே குறைவுபட்டு விடும். அந்த நேரத்திலே தாழ்மையாக இருந்து கர்த்தருக்கு ஸ்தோத்திரம் சொல்லிக்கொண்டு வாயை அடக்கி ஜீவித்தால் ஆண்டவர் மேலும் ஆசீர்வதிப்பார். பணம் வந்தவுடன் வாய் பேச்சு அதிகம். பெருமையாக பேசுவது, அற்பமாக பேசுவது. ரொம்ப ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். நம்மைச் சற்றி ஆபத்து இருக்கிறதே. இப்போது நமக்கு எல்லாம் இருந்தாலும் கர்த்தர் தந்திருக்கிறார் என்று ஆண்டவருக்கு ஸ்தோத்திரம் பண்ண வேண்டும்.

நாளைக்கு என்ன நடக்கும் என்று தெரியாது. நாளைக்கு நாம் உயிரோடு இருப்போம் என்று கூட தெரியாது. அதெல்லாம் யோசித்துப் பார்ப்போம். நம் குடும்பத்திலுள்ளவர்களுக்கு என்ன நடக்கும் என்று தெரியாது. விசுவாசத்திலாவது நாம் நிலைத்திருப்போமா? அது கூட தெரியாதே. இப்படி இருக்கும்போது, இந்த நிலையற்ற உலகத்திலேயே நாம் எவ்வளவாக கிருபையைச் சார்ந்திருக்க வேண்டும்.

அல்லேலூயா!

நாம் பயபக்தியாய் இருந்தால் கர்த்தர் நம்மை ஆசீர்வதிப்பார். அவர்களுக்கு மட்டும் அந்த பார்வோன் - பொல்லாத பார்வோன் வரவில்லை என்றால் எகிப்தில் எல்லாம் சம்பூரணமாய் கிடைத்திருக்கும். 'நான் அதை செய்தேன். இதை செய்தேன்' என்று மேன்மைபாராட்டி இருப்பார்கள். கொஞ்ச நாளில் புலம்ப வேண்டியது தான். 'நான், நான்.....' என்று சொல்லும்போது. 'நான் பெரிய ஆளு. பணவசதியிருக்கிறது. அப்படி பண்ணினேன். இப்படி பண்ணினேன்.' முன்னாடி நாம் எப்படி இருந்தோம் என்று நம் நிலைமையை யோசித்துப் பார்க்க வேண்டும். எப்படி இருந்த நம்மை ஆண்டவர் கொண்டு வந்திருக்கிறார். அல்லேலூயா! அதை நினைத்துப் பார்க்காமல் இருந்தோமென்றால் ஆண்டவர் அடித்தால் நம்மால் தாங்கமுடியாதே. உயர்த்துவதும் தாழ்த்துவதும் அவருடைய கரத்தில் இருக்கிறது. கர்த்தர் பார்த்தார். அந்த பார்வோனை மறக்கும் படியாக செய்தார். காரணம் அவர்கள் கானான் தேசத்திற்குப் போக வேண்டும்.

அல்லேலுயா! கானான் தேசத்திற்குப் போகவில்லையென்றால், இயேசுவை சந்திக்க முடியாது. தேவனுடைய ராஜ்ஜியம் கிடையாது. அல்லேலூயா! அல்லேலூயா! இதோ பலவிதமான சூழலின் மத்தியில் இருந்து கொண்டு வந்திருக்கும்போது கர்த்தருக்கு ஸ்தோத்திரம் சொல்லிக் கொண்டேயிருக்க வேண்டும்.

அல்லேலூயா!

''கர்த்தருக்குள் வந்து விட்டோம். ஆண்டவர் நம்மை ஆசீர்வதித்தார்" அப்படி என்று பெருமை வந்துவிட்டதென்றால் வீழ்ச்சிதான். கண்டிப்பாக வீழ்ச்சிதான். அதனால் எவ்வளவோ நாம் தாழ்மையாக இருக்க வேண்டும். தாழ்வில் நம்மை நினைத்துப் பார்க்கிறார். அல்லேலூயா! தாழ்வில் நினைத்தவரை துதியுங்கள்.

அல்லேலூயா!

இயேசு கிறிஸ்து ஒருபோதும் நம்மை மறக்க மாட்டார். ஆமென்!

## அபிகாயில்

அபிகாயில் சொல்கிறாள்: கர்த்தர் உம்மை ராஜாவாகக் கொண்டு வருவார். இப்போது நீர் சவுலின் கைக்கு பயந்து பயந்து காட்டுக்குள்ளே ஒளிந்து கிடக்கிறீர். நாடோடியாக அங்கே இங்கே என்று சுற்றிக்கொண்டேயிருக்கிறீர். ஒரு நாள் கர்த்தர்

சாமுவேலிடம் சொன்னபடி, உம்மை ராஜாவாகக் கொண்டு வரும்போது உமது அடியாளை நினைத்தருளும்.

அல்லேலூயா! அவளுடைய புருஷனாகிய நாபால் பொல்லாதவன். இதோ அவனுக்கு குழந்தையும் இல்லை. அவள், ''என்னை நினைத்தருளும்'' என்று கூறுகிறாள். 1 சாமுவேல் 25: 31 ல் இருந்து வாசிப்போம்:

**''நீர் விருதாவாய் இரத்தம் சிந்தாமலும், என் ஆண்டவனாகிய நீர் பழிவாங்காமலும் இருந்ததுண்டானால், அப்பொழுது என் ஆண்டவனாகிய உமக்குத் துக்கமும் இராது, மனஇடறலும் இராது; கர்த்தர் என் ஆண்டவனுக்கு நன்மை செய்யும்போது, உம்முடைய அடியாளை நினைப்பீராக என்றாள்.''**

கர்த்தர் உமக்கு நன்மை செய்யும்போது அடியாளை நினைப்பீராக. நீர் ராஜாவாக இருக்கும்போது என்னை நினைத்தருளும். தாவீது மறந்தானா? மறக்கவில்லை.

அல்லேலூயா! ராஜாவாக வருவதற்கு முன்னால் நினைத்துப் பார்த்தான்.

அல்லேலூயா!

ஏனென்றால், புருஷன் மரிக்காமல் வேறு விவாகம் பண்ண முடியாது. ஒரு பெண்ணுக்கு புருஷன் இருக்கிறான். அந்த பெண்ணுக்கு வேறு விவாகம் செய்யலாமா? புருஷன் மரித்தால் தான் விவாகம் செய்யலாம். அது மாத்திரமல்ல. புருஷன் மரித்தால் தான் என்று மட்டுமல்ல, குழந்தையிருக்கக் கூடாது. 'புருஷன் உயிரோடு இருக்கிறான். குழந்தையும் உயிரோடு இருக்கிறது. நான் செய்வதெல்லாம் சரி தான்' என்றால் அது எப்படி சரியாகும்?

பழைய ஏற்பாட்டில் கூட சரியாக இருக்காது. பழைய ஏற்பாட்டில் பல ஸ்திரீகளை விவாகம் செய்து கொள்ளலாம். ஆனால் புருஷன் உயிரோடு இருக்கக் கூடாது. அப்படி புருஷன் மரித்தாலும் குழந்தையிருக்கக்கூடாது. அப்படி அவன் செய்தான் என்றால் கர்த்தருடைய வார்த்தைக்கு விரோதமாக பாவம் செய்கிறான். அது மன்னிக்க முடியாத குற்றமாகிறது. பார்த்தீர்களா? புருஷன் மரிக்காமல் விவாகம் செய்ய முடியாது.

தாவீது இன்னொருவன் மனைவியை வைத்துக் கொள்ள அனுமதி இருக்கிறது. அது பழைய ஏற்பாட்டில், புதிய ஏற்பாட்டில் இல்லை. பழைய ஏற்பாட்டில் இருக்கிறது. ஆண்டவர் அனுமதி கொடுத்திருக்கிறார். ஆனாலும் அவளுடைய புருஷன் மரிக்காமல் விவாகம் செய்ய முடியாது. அபிகாயில், ''அடியாளை நினைத்தருளும்'' என்றாள். தாவீது அவளை நினைத்தான்.

அல்லேலூயா!

### *சிம்சோன்*

இதோ சிம்சோன் சொல்கிறான்: ''ஆண்டவரே, நான் தவறு செய்து விட்டேன், கண் இரண்டும் போய் விட்டது என்னுடைய பலம் போயிற்று. என்னை நினைத்தருளும்'' என்று சொன்னான். நியாயாதிபதிகள் 16:28ல் வாசிக்கிறோம். ''என்னை நினைத்தருளும்'' என்று சொன்னபோது கர்த்தர் நினைத்தருளினார்.

அல்லேலூயா!

கர்த்தர் மறக்கவில்லை. அவன் தெரிந்து கொள்ளப்பட்டவன். அபிகாயில் தெரிந்து கொள்ளப்பட்டவள். நம்முடைய பழைய புருஷன் பிசாசு மரித்து விட்டான்.

அல்லேலூயா!

நாம் இயேசுவுக்கு சொந்தம். அவர் நம்மை மறக்க மாட்டார்.

அல்லேலூயா! சிம்சோன் தேவனால் தெரிந்துக் கொள்ளப்பட்டவன். இதோ கர்த்தர் அவனை கவனித்துக்கொண்டே இருந்தார். இப்போது அவன் உணர்வு அடைகிறான்.

தன்னுடைய தவறை உணர்கிறான். அவன், "இந்த ஒருவிசை மாத்திரம் என்னை நினைத்தருளும்" என்றான். கர்த்தர் நினைத்தருளினார்.

அல்லேலுயா! இழந்து போன பலத்தை மறுபடியும் கொடுக்கிறார். பெரிய இரட்சிப்பை ஏற்படுத்தினார்.

### வலது பக்கத்துக் கள்ளன்

அந்த வலது பக்கத்துக் கள்ளன் என்ன சொல்கிறான். இயேசு கிறிஸ்துவை அவன் திட்டவில்லை. இடது பக்கத்தில் இருக்கிறவன் திட்டிக் கொண்டே இருக்கிறான். ஆனால் வலது பக்கத்தில் இருக்கிறவன், "அவர் ஒரு பாவமும் செய்யாதவர். அவரை ஏன் நீ திட்டுகிறாய்" என்று கடிந்துக் கொள்கிறான். "ஆண்டவரே உம்முடைய ராஜ்ஜியத்தில் வரும்போது அடியேனை நினைத்தருளும்" என்றான்.

அல்லேலூயா!

இயேசுவோ, "இன்றைக்கு நீ என்னுடனே கூட பரதீசில் இருப்பாய்" என்று அவனுக்கு வாக்குப் பண்ணினார். இயேசு கிறிஸ்து நம்மை மறப்பதில்லை. எத்தனை பேர் விசுவாசிக்கிறோம். நாம் தெரிந்து கொள்ளப்பட்டவர்களாக இருந்தால் இயேசு நம்மை மறப்பதில்லை. நம்முடைய வாழ்க்கையை அவர் கவனித்துக்கொண்டே இருக்கிறார். எல்லா சம்பவங்களும் தேவனுடைய வழிநடத்துதலின்படியே நடக்கிறது. சகலத்தையும் நன்மைக் கேதுவாக முடிப்பார்.

அல்லேலூயா!

நாம் எதை செய்தாலும் அதை தேவனுக்கு என்று செய்வோம். மனிதனுக்கு என்று செய்யாதபடி தேவனுக்கு என்று செய்வோம் என்றால் மனுஷன் மறந்தாலும் கர்த்தர் மறப்பது இல்லை. கர்த்தர் நம்மை எப்போதும் நினைத்துக் கொண்டிருக்கிறார்.

அல்லேலூயா! எப்போதும் நம்முடைய நினைவாகவே இயேசு கிறிஸ்து இருக்கிறார். அவர் நம்முடைய சிருஷ்டிகர். அவர் நம்முடைய நாயகர். அவர் நம்முடைய மீட்பர். அவர் நம்முடைய ராஜா.

அல்லேலூயா!

கர்த்தர் எவ்வளவோ நல்லவராய் இருக்கிறார். நம் வாழ்க்கையிலே எல்லா சூழலும் அவருக்குத் தெரியும். ஒரு வேளை பணப்பிரச்சனையாக இருக்கலாம். சரீரத்தில் உள்ள பெலவீனமாக இருக்கலாம். நம்மை சுற்றிப் போராட்டங்கள் இருக்கலாம். மனதில் பல பயங்கள் இருக்கலாம். எல்லாவற்றையும் கர்த்தர் அறிந்திருக்கிறார். பல விதமான சூழ்நிலைகளும் நம்முடைய வாழ்க்கையிலே வந்திருக்கலாம்.

ஆனால் கர்த்தர் நல்லவராகவே இருக்கிறார். கோணலை நேராக்கி குற்றங்களை மன்னித்து, யாக்கோபை எப்படி அவர் கிருபை கொடுத்து, அவனை பரிபூரணமடையப் பண்ணினாரோ அப்படியே கர்த்தர் நமக்கும் செய்து அவருக்கு முன்பாக நிறுத்தும் வரைக்கும், நாம் அவருடைய சமூகத்திலே போய் சேரும் வரைக்கும் அவர் நம்மை மறப்பதில்லை. கைவிடுவதில்லை. யோசேப்பு இரண்டு முறை மறக்கப்பட்டான். அந்த இரண்டு முறை மறக்கப்பட்டதும் நன்மைக்கு தான். அது நன்மைக்கேதுவாக முடிந்தது.

முதல் முறை மறக்கப்பட்டதால் தான் அவன் எகிப்து தேசத்துக்கு அதிபதியாக மாறினான். இரண்டாம் முறை மறக்கப்பட்டதால் தான் இஸ்ரவேல் ஜனங்கள் கானான் தேசத்துக்கு போக முடிந்தது. அதேபோல உலகமானது தலைகீழாகப் போனாலும் நம்மை சுற்றியிருக்கிற சூழ்நிலைகள் எதிர்மாறாக இருந்தாலும் இப்போது நம்முடைய சூழ்நிலைகள் வேறு விதமாக இருந்தாலும், இயேசு கிறிஸ்து நல்லவராக இருக்கிறார். நாம் சத்தியத்தை விட்டுப் போக முடியாது. ஆண்டவரை விட்டு நாம் தூரப்போக முடியாது.

நமக்கு கொடுத்த வெளிப்பாட்டிலே நிலைத்திருக்கும்போது கர்த்தர் நமக்கு எப்போதும் நல்லவராய் இருக்கிறார். சகலமும் நன்மைக்கேதுவாய் நடக்கிறது. நம்மைச்

சுற்றி பல காரியங்கள் இருக்கலாம். அரசியலில் பல காரியங்கள் நடக்கலாம். நம்முடைய சுற்றுப்புற சூழ்நிலைகள், நாம் வேலை பார்க்கிற இடத்திலே எல்லாமே தலைகீழாக இருக்கலாம். நேருக்கு மாறாக இருக்கலாம். சூழ்நிலைகள் எல்லாம் நமக்கு எதிராக இருக்கலாம். ஆனாலும் இயேசு கிறிஸ்து நம்மோடு கூட இருக்கிறார். நாம் அவருடைய தெரிந்துக் கொள்ளப்பட்டவர்கள். அவர் எப்போதும் நம்முடைய நினைவாகவே இருக்கிறார். அவர் உள்ளங்கையிலே நம்மை வரைந்திருக்கிறார்.

நாம் எல்லோரும் கர்த்தருக்கு துதிகளைச் செலுத்துவோம். இயேசு கிறிஸ்து நல்லவராய் இருக்கிறார். அவருடைய அன்பு மாறாதது. அவர் சர்வ வல்லமையுள்ள தேவன். நம்முடைய வாழ்க்கையிலே உள்ள அவருடைய திட்டத்தை நிறைவேற்றுபவராய் இருக்கிறார். தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக!

★★★★★

*மேலும் சத்தியத்தை விபரமாக அறிய விரும்பினால் www.calvarytabernacle.in என்ற எங்கள் சபை இணையதளத்தில் (website) கர்த்தருடைய வெளிப்பாடான வார்த்தையைக் கேளுங்கள். கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் கிருபை உங்களோடு இருப்பதாக. ஆமென்.*


## <u>முகவரி</u>

***கல்வாரி சபை***

***10, கலைஞர் தெரு***

***வளசரவாக்கம்***

***சென்னை - 600 087***

***தொலைபேசி: +91 9884720958***

samuelappadurai@gmail.com
www.calvarytabernacle.in